
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



நாயகன் ஆகியே தந்தை செவிகளில்
ஞான முரைத்தவன் வேல்முருகன் — அந்தத்
தாயணை யான்மலை சாமிமலை — அவன்
தாளிணை போற்றிட வாருங்களே!

ஜூன் 1989

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 8
ஒலி 5

சுக்ல
வைகாசி

ஜூன்
1989

கோள் விரோதமும் கூற்றின் விரோதமும்
நாள் விரோதமும் தீர்த்தருள் நல்குவாய்
கேள்வியால் உணர்ந்தோர்தமைக் கிட்டநின்று
ஆள்வி ஜேத தண்டாயுத பாணியே,

— மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00

வலையபட்டியில் வேடிக்கைப் பேச்சு!

''இன்று ஒன்பது நகரத்தார் பெருமக்கள் பாராட்டப் பெறுகின்றனர். இவர்களில் ஐந்து பேர் நேமங்கோவிலையும் இருவர் பிள்ளையார்பட்டிக் கோவிலையும் ஒருவர் இரணிக் கோவிலையும் ஒருவர் வயிரவன் கோவிலையும் சேர்ந்தவர்கள். ஆக பாராட்டுப் பெறுவோரில் நேமங்கோவில் காரர்களே எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர்'' என வயிரவன் கோயிலைச் சேர்ந்த பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் பாராட்டிப் பேசும்போது கூற—

''உங்கள் வயிரவன் கோயில் காரர் ஒருவருக்கு எங்கள் நேமங் கோயிலைச் சேர்ந்த ஐந்து பேர் ஈடாகமாட்டார்கள்'' என நேமங் கோவிலைச் சேர்ந்த - ''நகரத்தார் குரல்'' ஆசிரியர் வீ என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஏற்புரை நல்கியபோது வேடிக்கையாகக் கூற, கூட்டம் கரவொலிகளால் கலகலத்தது.

அரசு வழக்குரைஞர் ஏஆர். லெட்சுமணனுக்குப் பாராட்டு

சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசு வழக்குரைஞராக ஏ ஆர். லெட்சுமணன் அவர்கள் நியமனம் செய்யப்பெற்றதை யொட்டி தேவகோட்டை நகரத்தார்கள் சார்பில் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் தலைமையில் தேவகோட்டையில் 7-5-89 அன்று பாராட்டு விழா நடைபெற்றது

நகரத்தார் உயர்நிலைப் பள்ளி சார்பாகவும், தேவகோட்டை நகரத்தார்கள் பழைய மாணவர்கள் சார்பாகவும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பெற்றன.

வாழ்க்கை நான்கு வகைப்படும்

ஃ வாழ்க்கையில் இலைவாழ்க்கை, கிளை வாழ்க்கை, மர வாழ்க்கை, வேர் வாழ்க்கை என்று நான்கு வகைகள் உண்டு.

ஃ நீ இலையாக வாழ்ந்தால் உதிர்ந்து சருகாகிப் போகிறாய்.

ஃ கிளையாக வாழ்ந்தால் சில இலைகளையாவது உற்பத்தி செய்கிறாய்.

ஃ மரமாக வாழ்ந்தால் கிளைகளையும், இலைகளையும் உண்டாக்குகிறாய்.

ஃ வேராக வாழ்ந்தாலோ அனைத்தும் நீயே!

— கவியரசு கண்ணதாசன்

அனுப்பியவர்:
இராம. அலமேலு.

காரைக்குடியில் கவியரங்கம்

காரைக்குடியில் கொப்புடையம்மன் கோவிலில் 'விளக்கேற்ற வாருங்கள்' என்ற தலைப்பில் கவியரங்கம் நிகழ்ந்தது. அறங்காவலர் குழுத் தலைவர் திரு மாரிமுத்து பிள்ளை வாழ்த்துரை வழங்கினார். மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் தலைமை ஏற்றுத் தலைமை விளக்காகக் கவிபாடினார். அகல் விளக்காக செல்வி நா. கண்ணகி. அகண்டம் விளக்காக செல்வி எம். புனிதவதி, மாவிளக்காக நா. மீனவன், கோபுர விளக்காக கா. முத்துமணி, குத்து விளக்காக சிவல்புரி சிங்காரம், கலங்கரைவிளக்காக எஸ். இராமநாதன், தெருவிளக்காக கஸ்தூரி நாதன் ஆகியோர் கவியால் விளக்கேற்றி ஒளி கூட்டினார்கள். நிர்வாக அதிகாரி திரு. எம். கே. மீனாட்சி சுந்தரம் நன்றி கூறினார்.

திருச்சி நகரத்தார் சங்கத்தின் முப்பெரும் விழா

திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்க மன்றத்தில் 14-5-89 அன்று திருச்சி நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம், 40 ஆவது ஆண்டு விழா, பாராட்டு விழா, பட்டிமன்றம் ஆகியவை நடைபெற்றன. சங்கத் தலைவர் திரு. எல். என். லெட்சுமணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரைப்பட இயக்குனர், சட்டமன்ற உறுப்பினர் இராம நாராயணன் அவர்களுக்கும் சென்னை உயர்நீதிமன்ற அரசு நியாயவாதி ஏ. ஆர். லெட்சுமணன் அவர்களுக்கும் காரைக்குடி நகராட்சித் தலைவர் சித. சிதம்பரம் அவர்களும், திருச்சி மாவட்ட கூடுதல் நீதிபதி எம் சொக்கலிங்கம் அவர்களும் பொன்னாடை அணிவித்துப் பாராட்டிப் பேசினார்கள். சிறப்பு விருந்தினர் சேலம் நகரத்தார் சங்கத் தலைவர் எம். எஸ் சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கும் பொன்னாடை அணிவிக்கப் பெற்றது.

''தாய் பெரிதும் பேணுவது மகன்களையே - மகள்களையே'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. 'மகன்களே' அணியில் டாக்டர் சபா. அருணாசலம் பேராசிரியை சி. எஸ். விசாலாட்சி, பேரா. இராமசாமி ஆகியோரும் 'மகள்களே' அணியில் மக்கள் கவிஞர் அரு. நாகப்பன், பேராசிரியர் நா. சுப்பிரமணியன், திருமதி உமையாள் முத்து, ஆகியோரும் பங்கேற்றனர் 'தாய் பெரிதும் பேணுவது மகள்களையே' என்று நடுவர் பொறுப்பேற்ற திரு. கண. சிற்சபேசன் தீர்ப்பு வழங்கினர். செட்டிநாடு. சிட் பண்ட்ஸ் நிறுவனம் நகரத்தார் சங்கத்துடன் இணைந்து நடத்திய மாறுவேடப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு சிறப்பு விருந்தினர் திரு. எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள். செயலாளர் திரு. எஸ்பி. அருணாசலம் நன்றி நவின்றார்.

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் அறிவிப்பு

1989-90 ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பு, பொறியியல் படிப்பு (Professional Courses) எம். காம், எம். எஸ்ஸி, எம். ஏ, பி. காம், பி. எஸ்ஸி, பி. ஏ, (Graduate Courses) மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளுக்கு மாணவர்களுக்கு கல்விக்கு திருப்பித்தரும் நிதி உதவியாகவும், மாணவிகளுக்கு இலவச நிதி உதவியாகவும், வழக்கம போல கல்வி நிதி உதவி வழங்கப்பட இருக்கிறது. கல்வி நிதி உதவி விண்ணப்பப் படிவம் வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்:

செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம், 88. பவளக்காரத் தெரு, சென்னை-600001.

திருமணம்

செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக்கின் உதவி முதல்வர் எம் அழகப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் முருகப்பன் B.E (M.E) க்கும் கண்டனூர் என். ஏ. வி அழகப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அழகம்மை B.Com க்கும் கண்டனூரில் 18-5-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது திருமணத்திற்கு செட்டிநாடு குமாரராணி திருமதி மீனா முத்தையா திருமதி சிகப்பிஇராமசாமி திரு. ஏ ஆர். இராமசாமி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. இராம. சேது நாராயணன் மற்றும் பேராசிரியர்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர்.


எனது வெளிநாட்டு அனுபவங்கள்




வி.என்.சிதம்பரம்

—41—

லாஸ்ஏஞ்சல்ஸில்தான் உலகப் புகழ்பெற்ற சினிமா உலகமான ஹாலிவுட் இருக்கிறது. ஹாலிவுட்டிற்கு உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வேடிக்கை பார்ப்பதற்கும், வியாபாரத்திற்கும் ஆட்கள் வருகிருர்கள். லாஸ்ஏஞ்சல்ஸில் இருந்து சுமார் 20 கி. மீ. தூரத்தில் ஹாலிவுட் அமைந்திருக்கிறது லாஸ்ஏஞ்சல்ஸில் இருந்து காலையில் நம்மை பஸ்ஸில் அழைத்துச் சென்று இரவு திரும்பக் கொண்டுவந்து விடுகிறார்கள். செல்லுகிற வழியில் பிரபல ஹாலிவுட் சினிமா நட்சத்திரங்களின் பங்களாக்கள் இருக்கின்றன. பஸ்ஸில் நமக்கு ஒருவர் மைக்கின் மூலம் விவரத்தைச் சொல்லிக் கொண்டே வருகிருர். 'இது இந்த நடிகரின் வீடு' என்று சொல்கிருர். அங்குள்ள சினிமா நட்சத்திரங்களின் வீடு ஒவ்வொன்றும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறும்.




அமெரிக்க நாட்டின் ஹாலிவுட்டில் உள்ள யுனிவர்ஸல் ஸ்டுடியோவின் அழகுத் தோற்றம்.



லாஸ்ஏஞ்சல்ஸ் நகரத்தில் காரைக்குடி எஸ் ஆர். எம் எஸ். என். சுப்பு அவர்களும் வி. என். சிடி அவர்களும்.

அந்த சினிமா நட்சத்திரங்களின் வீடுகளுக்கு இடையே நமது தமிழகத்து டென்னிஸ் வீரர்களான விஜய் அமிர்தராஜ், ஆனந்த் அமிர்தராஜ் வீடும் இருக்கிறது. அதை பஸ்ஸில் உள்ள மைக்கில் சொன்ன போது கேட்டுப் பூரிப் படைந்தேன். அமிர்தராஜ் சகோதரர்கள் டென்னிஸ் விளையாடுவதோடு ஹாலிவுட்டில் திரைப் படங்களும் தயாரித்து இருக்கிறார்கள். கோடம்பாக்கத்தில எப்படி ஸ்டுடியோக்கள் அமைந்திருக்கிறதோ அதைப்போல ஹாலிவுட்டில் ஸ்டுடியோக்கள் வரிசையாக அமைந்துள்ளன. கோடம்பாக்கத்தில் ஸ்டுடியோக்கள் 10, 20 ஏக்கர்களில் அமைந்திருக்கின்றன. ஆனால் ஹாலிவுட்டில் ஒவ்வொரு ஸ்டுடியோவும் 400, 500 ஏக்கர்களில் அமைந்திருக்கின்றது. யுனிவர்சல் ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்த்தோம். ஹாலிவுட்டி-லே மிகப் பெரிய ஸ்டுடியோ இதுதான். இந்த ஸ்டுடியோவை 1915 ஆம் ஆண்டில் 420 ஏக்கர் பரப்பளவில் அமைத்திருக்கிறார்கள். இங்கு வந்து நடிக்காத பெரிய சினிமா நட்சத்திரங்களே இல்லை ஆயிரக்கணக்கான படங்கள் இங்கு தயாராகி இருக்கின்றன. ஆனால் டெலிவிஷன போட்டியால் படம் எடுப்பது குறைந்து இப்போது டெலிவிஷன் படங்



லாஸ்ஏஞ்சல்ஸ் வாக்ஸ் மியூசியத்தில் லாரல் ஹார்டியின் மெழுகு பொம்மைகள்.

களைத் தயாரிக்கிறார்கள். ஸ்டுடியோவுக்குள் செல்வதற்குத் தனியாக டிராம் வண்டிகள் இருக்கின்றன. ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்ப்பதற்கு கட்டணம் உண்டு. ஒரு கோச்சிற்கு 200 பேர் விதம் நான்கு கோச்சுகளில் அழைத்துச் செல்கிறார்கள். எல்லாக் கோச்சிலும் மைக், ஸ்பீக்கர் பொருத்தப்பட்டு ஒருவர் விளக்கிச் சொல்லிக் கொண்டு வருகிறார். சில இடங்களில் 200 ஆண்டுகளுக்கு முன் இலண்டன், அமெரிக்க நகரங்கள், கிராமங்கள் எப்படி இருந்ததோ அதே போல வீடுகளைக் கட்டி செட்டுகளை நிரந்தரமாகஅமைத்து இருக்கிறார்கள். செயற்கையான பாலங்களை அமைத்து அந்தப் பாலங்களில் நமது டிராம் கடந்த பிறகு அந்த பாலங்கள் உடைவது போலக் காண்பிக்கிறார்கள். ஸ்டுடியோவைப் பார்ப்பதற்கு ஒரு நாள் போதாது சிலஇடங்களில் திரைப் படங்களின் படப்பிடிப்பும் வீடியோ படங்களின் படப்பிடிப்பும் நடைபெறுகின்றன. அவற்றைப் பார்க்க நம்மை அனுமதிக்கிறார்கள். நாம் விருப்பினால் வீடியோ படங்களில் நம்மை நடிக்க அனுமதிக்கிறார்கள். செட்டிற்குள்ளே கடல், அதில் திமிங்கலங்கள். அந்தத் திமிங்கலங்கள் கப்பலைக் கவிழ்ப்பது போல காட்சிகள், கப்பலைக் கவிழ்க்கும் போது கப்பலில் உள்ளவர்கள் கடலிலே விழுகின்ற காட்சிகள் அனைத்தும் பொம்மைகள் மூலமாக தத்ரூபமாக நமக்குக் காண்பிக்கிறார்கள். இப்படிப் பல காட்சிகளைப் பார்த்து விட்டு கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு, திரு. சுப்பு அவர்கள் இல்லத்திற்குத் திரும்பினேன்.

லாஸ்ஏஞ்சல்ஸில் 200 புகழ் பெற்ற நடிகர்கள், நடிகைகளை மெழுகு பொம்மைகளாக செய்து வைத்து இருக்கிறார்கள். அவர்களோடு நாம் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம். நேரில் பார்ப்பது போல மிக அழகாக செய்து இருக்கிறார்கள். லாரல்ஹார்டி பொம்மைகள் தத்ரூபமாக அமைந்திருக்கிறது.

(வளரும்)

பவள விழா

காசிக்குப் பாத யாத்திரை சென்று 'காசிஸ்ரீ' பட்டம் பெற்ற குருநாதர் சித. சிதம்பரம் செட்டியார் அவர்களின் 75 ஆவது ஆண்டு நிறைவுப் பவள விழா காரைக்குடியை அடுத்துள்ள துலாவூரில் 7-5-89 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. வாழ்த்தரங்கிற்கு திரு. சோம. கயிலாயநாதன் செட்டியார் தலைமை தாங்கினார். திரு. மு. உடையப்பன் வரவேற்றார் திருவாளர்கள் காசிஸ்ரீ சுப. இராகவன் சோம. நாராயணன் கே. ஆர். முத்தையா செட்டியார் ப்ழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

துலாவூர் ஆதீனகர்த்தர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளும், பாதரக்குடி ஆதீன கர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகளும் வாழ்த்துரை வழங்கினர். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் சேது அருணாசலம் இராம. வீரப்பன் மீனவன் அரு. சுந்தரம் குப. சொக்கலிங்கம் கா. நாகப்பன் ஆகியோர் கவி பாடினர். கண்டனூர் கா. அருணாசலம்செட்டியார் பொன்னாடை போர்த்தினார்.

மணி விழா

கோவிலூர் ஆதீனகர்த்தரின் அண்ணன் மகன், சிவபூசகர் மு. அ. மு. அண்ணாமலை செட்டியார் அவர்களின் மணிவிழா பள்ளத்தூரில் 7-5-89 அன்று சிறப்பாக நிகழ்ந்தது. மணிவிழாவை ஒட்டி அமைந்த வாழ்த்துக் கவியரங்கிற்கு ''காசிஸ்ரீ'' திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினார். கவிஞர்கள் சேது அருணாசலம், கா. நாகப்பன், இராம வீரப்பன், மீனவன் ஆகியோர் கவிபாடினர். புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் பாராட்டிப் பேசினார். திரு அண. அண்ணாமலை நன்றி கூறினார்.

காரைக்குடியில் ஒன்பது நகரக் கோயில்களின் சுவாமி அம்மன் படங்கள்

காரைக்குடி நகரச் சிவன் கோயிலில் மீனாட்சி அம்மன் சன்னதி அருகில் ஒன்பது நகரக் கோயில்களின் சுவாமி, அம்மன் படங்கள் 5-4-89 அன்று திறந்து வைக்கப் பெற்றுள்ளன. இப் படங்கள் திரு. பேரா. நாராயணன் (தலைவர், நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றம்) திரு. என்பி இராமசாமி (துணைத் தலைவர் ந இ ந. ப.) திரு அரு. வள்ளியப்பன் (முன்னாள் துணைத் தலைவர்) ஆகியோரின நன்கொடையாக வழங்கப் பெற்றுள்ளது. இப்படங்களைக் கண்ணுறும் மக்கள் 'இது நல்ல புதுமையான முயற்சி' எனப் பாராட்டுகின்றனர்.

காரைக்குடி இன்னர்வீல் சங்கக் கூட்டம்

காரைக்குடி இன்னர்வீல் சங்கக் கூட்டம் 9-5-89 அன்று சங்கத் தலைவர் டாக்டர் அலைஸ் செல்லப்பா தலைமையில் கம்பன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் திருமதி ரீகன் ஜாபர் அலியை, அகல்யா ராகவன் அறிமுகப்படுத்தினார். அழகு சாதனங்களையும் அவைகளைப் பயன்படுத்தும் முறைகளையும் விளக்கி சிறப்பு விருந்தினர் பேசினார். திருமதி மீனாட்சி அருணாசலம் நினைவுப் பரிசை சிறப்பு விருந்தினருக்கு வழங்கினார். கூட்டத்தில் வசந்தாள் சுந்தரம், ரமாதேவி ராமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். செயலாளர் நாச்சம்மை கருப்பஞ்செட்டி நன்றி கூறினர்.

மக்கள் இயக்குநர், சட்டமன்ற உறுப்பினர்

இராம. நாராயணனுடன் ஒரு பேட்டி

பணம், புகழ், செல்வாக்கு என்ற மூன்றையும் பெற்றுத் தருவது திரை உலகம். அரிய தொண்டுகளினாலும் சிறந்த சேவைகளினாலும் மக்கள் மனத்தில் நிலையான இடம் பெற்றுத் தருவது அரசியல். அந்தத் திரை உலக வாழ்வையும் இந்த அரசியல் வாழ்வையும் இன்று ஒன்றாக தன்னுடன் இணைத்துக் கொண்டு சுறுசுறுப்பாக இயங்கி வருபவர் நம் பெருமைக்குரிய இராம. நாராயணன் அவர்கள்.

திரு. இராம. நாராயணன் காரைக்குடியில் பிறந்தவர். நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர். தந்தையார் இராம சாமிச் செட்டியார். தாயார்-மீனாட்சி ஆச்சி. திரு. இராம. நாராயணனுக்கு திரு. இராம. சுப்பையா, திரு. இராம. அண்ணாமலை என இரு அண்ணன்கள்; ஒரு தம்பி; இரு தங்கைகள்.

திரு. இராம. நாராயணன் திருமணம் ஆனவர். இவரது மனைவி பெயர்-இராதா. இவர்களுக்கு இரண்டு பெண்களும் ஒரு பையனும், மூத்த பெண் அன்பு மீனாள், கோட்டையூரில் 9-ஆம் வகுப்புப் படித்து வருகிறார். அடுத்த பையன் முரளியும் பெண் உமாவும் சென்னையில் படித்து வருகிறார்கள்.

திரு. இராம. நாராயணனை அண்மையில் காரைக்குடியில் சந்தித்து ''நகரத்தார் குரல்''லுக்காகப் பேட்டி கண்டோம். ஓய்வில்லாத பல அலுவல்களுக்கிடையே அவர் மகிழ்ச்சியுடன் பேட்டியளித்தார்.

முதல் வினாவாக—

''நீங்கள் திரை உலகில் எப்படிக் காலடி எடுத்து வைத்தீர்கள்.........?'' என்று கேட்டபோது—


''படிக்கும் காலத்திலேயே திரைப்படங்கள் மீது எனக்குப் பிரியம் அதிகம். காரைக்குடியில் எஸ். எம். எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது எம். ஜி. ஆர். நடித்த படங்களை அதிகம் பார்த்தேன். பிறகு கவியரசு கண்ணதாசனிடம் 1969ல் உதவியாளராகச் சேர்ந்து இரண்டாண்டுகள் அவரிடம் பணிபுரிந்தேன். அப்போது ''ஆசை 60 நாள்'' என்ற படத்திற்கு முதன் முதலாகக் கதை, வசனம் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து இதுவரை 55 திரைப் படங்களை இயக்கியுள்ளேன். ''சுமை'' என்ற படத்தைத் தொடர்ந்து இதுவரை 30 படங்களைத் தயாரித்துள்ளேன். நான் இயக்கிய படங்களில் 12 படங்கள் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்றுள்ளன. என்னுடைய படங்கள் அனைத்தும் குறுகிய காலத் தயாரிப்பாகும். நான் என்னுடைய படங்களின் மூலம் நல்ல பல கருத்துக்களை மக்களுக்குச் சொல்லி வருகிறேன்'' என்று விடையளித்தார்.

''இன்றைய தமிழக முதல்வர், கலைஞர். மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் நட்பு தங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

"இது எங்க நாடு" என்ற டாக்டர் கலைஞர் அவர்களின் சொந்தப் படத்திற்குக் கதை வசனம் எழுதும் ஒரு அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது பெருமையாகவும் தொழிலில் முன்னேற்றம் காண உந்துதலாகவும் இருந்தது. தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள் "முரசொலி" நாளிதழில் கரிகாலனின் கேள்வி ஒன்றுக்குப் பதில் கூறுகையில் என்னுடைய வசனத்தைப் பாராட்டி "என்னைவிட ஒருபடி மேலாகவே இராம. நாராயணன் வசனம் தீட்டியுள்ளார்." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது நான் பெற்ற பேறு. தங்கத் தலைவர் கலைஞர் அவர்களுடன் தனிப்பட்ட முறையில் பல செய்திகளைப் பகிர்ந்து கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அவரை நான் தாயன்போடு நேசித்தேன். நெருங்கிப் பழகினேன். என்னுடைய திரைப்படங்களில் தி. மு. கழகப் பிரச்சாரம் செய்தேன். அதே சமயம் முந்திய அரசின் அக்கிரமங்களையும் குறைபாடுகளையும் எடுத்துக் காட்டினேன். அதனால் நான் பட்ட தொல்லைகள் துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றையெல்லாம் கலைஞரின் அன்பினால் சமாளித்தேன். என்னுடைய தொழிலுக்குப் பலத்த எதிர்ப்பு வந்தபோது அதனைச் சமாளித்துக் கொண்டு 'காலம் ஒருநாள் நிச்சயம் கனியும்' என்று இருந்தேன். அந்தக் காலம் இப்போது கனிந்து தமிழர்களுடைய பொற்காலம் அமைந்து விட்டது."

"சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது......கொஞ்சம் சொல்லலாமா?"

"என்மீது அன்பும் நம்பிக்கையும் கொண்ட தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள் காரைக்குடி சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிடுமாறு என்னைப் பணித்தார்கள்; நான் தயக்கம்காட்டினேன். அதற்கு அவர்கள் "நீ பிறந்த ஊருக்கு



இராம. நாராயணன்

நன்மை செய்ய வேண்டும் அதே சமயம் நீ சார்ந்துள்ள கலை உலகப் பிரச்னைகளைக் கலந்தாலோசிக்க உன்னைப் போல் எனக்கு ஒருவன் வேண்டும்'' என்று கூறி என்னை வேட்பாளராக நிறுத்தினார்கள் தொகுதி மக்களும் தாயினும் மேலாக என் மீது பாசம் காட்டி காரைக்குடித் தொகுதி சட்டமன்றத் தேர்தல் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு இருபத்தையாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்தார்கள் நிச்சயமாக என் தொகுதி மக்களுக்கு வேண்டிய தொண்டுகளை, சேவைகளைச் செய்து அவர்களது அன்பினைப் பெறுவேன் என்று உறுதி கூறுகிறேன்''

''தாங்கள் திரைப்பட இயக்குநராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து கொண்டு இரண்டையும் ஒரே நேரத்தில் சிறப்பாகச் செய்யமுடியும் என்று நம்புகிறீர்களா?''

''நிச்சயமாக முடியும். மக்கள் விழிப்புணர்ச்சி பெற திரைப்படங்கள் ஒரு சிறந்த சாதனம். பேரறிஞர் அண்ணா, தங்கத் தலைவர் கலைஞர் போன்றவர்களால் புரட்சி பெற்ற, வளர்ச்சி பெற்ற தொழில் இது இதனை நான் என் வாழ்வின் தொழிலாகவும் அரசியலைத் தொண்டாகவும் கருதிச் செயல்படுவேன். என்னுடைய படங்களில் கழகத்தின் சாதனைகளை எடுத்துச் சொல்வேன். அத்துடன் என் தொகுதிக்கு அடிக்கடி வருவேன்; குறைகளைக் களைவேன்.''

பேட்டி முடிந்து திரு. இராம. நாராயணனிடம் விடை பெற்றபோது ''மிக்க நன்றி'' என்று கூறியதோடு ''உங்களது ''நகரத்தார் குரல்'' வாசகர்களுக்கு எனது அன்பையும் நல்வாழ்த்துக்களையும் மறவாமல் தெரிவியுங்கள்'' என்று கூறினார்.

நம் சமூகத்தைச் சேர்ந்த திரு. வலம்புரி சோமநாதன், திரு. எஸ்பி முத்துராமன், திரு. காரைக்குடி நாராயணன், திரு. தேவராஜ் போன்றவர்கள் திரைப்பட இயக்குநர்களாக இருக்கிறார்கள் என்றாலும் நம்மினத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர் திரு. இராம. நாராயணன் ஒருவரே. அவர் திரை உலகிலும் அரசியலிலும் மேலும் கொடிகட்டிப் பறக்க நம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்போமாக.



முனைவர் தமிழண்ணலுக்குப் புதிய பொறுப்பு!

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையைச் சேர்ந்த கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக் குழுவின் தலைவராக, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் தமிழண்ணல் அவர்கள் தேர்வு செய்யப் பெற்று 7-5-89 முதல் பொறுப்பேற்றுச் செயலாற்றி வருகிறார்கள், அவர்களுக்கு நமது நல்வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம். (இப்பொறுப்பினை மூதறிஞர், செம்மல் முனைவர் வ சுப. மாணிக்கனார் அவர்கள் ஏற்கனவே ஏற்றிருந்தார்கள்.)

நகரத்தார் விஞ்ஞானிக்கு இந்திய தேசிய அளவிலான விருது!

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் உயிரியல் பள்ளியின் ஒருங்கிணைப்பாளராகவும் தலைவராகவும் இன்று விளங்கி வருபவர் பலவான்குடியைச் சேர்ந்த முனைவர் வீர. முத்துக்கருப்பன் அவர்கள். தடுப்பியல் துறைத் தலைவராகப் பல்லாண்டுகளாக விளங்கி வரும் இவர்களது ஆராய்ச்சிகள், மானிட சமுதாயத்திற்கும் நேரடியாகப் பல்வேறு நிலைகளில் பயன் படுவனவாகும்.



உதாரணமாக குட்டம் எனப்படும் கொடிய நோயின் மூலத்தை ஆய்ந்தறிந்து அந்நோய் வருமுன் காப்பதற்கான பல நுண்திறன் ஆய்வுகளும் இவரது துறையில் மேற்கொள்ளப் பெறுகின்றன.

இவரது பணியின் சிறப்புக்களை அங்கீகரித்து சிறப்புச் செய்யும் முகத்தான் இந்திய தேசிய அறிவியல் கழகம (Indian National Science Academy) 1988 அக்டோபர் மாதம் முதல் தனது கழகத்தில் ஆய்வுத் தகைஞராக (Fellow) இவரை ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்விருது (F. N. A.) நகரத்தார்களில் இவருக்கே முதலாவதாகக் கிடைத்திருப்பது அனைவரும் பெருமைப் படக் கூடியதாகும். உயிரியல் துறையில் ஒருங்கிணைப்பாளராக இருந்த முனைவர் சீனி கிருட்டிணசாமி, முனைவர் மா. லெட்சுமணன் இருவரும் துணைவேந்தர்களாகி விட்ட நிலையில் இவர் மூன்றாவதாக ஒருங்கிணைப்பாளர் (Co-Ordinator) பொறுப்பை ஏற்றுள்ளார். முனைவர் வீர. முத்துக்கருப்பன் அவர்களுக்கு நமது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமணம்

அரண்மனை சிறுவயல் சுப. உடையப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. இராமநாதனின் புதல்வியுமான செல்வி கல்யாணி (B. Sc)க்கும் கொ. அழகாபுரி ஓ. எம். எஸ்எம். கிருஷ்ணன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் ராஜா B. E. M. Tech (ph. D.)க்கும் அரண்மனை சிறுவயலில் 11-5-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது

காரைக்குடி பாராட்டு விழாவில் கேட்ட நல்முத்துக்கள்!

தென்னரசு எங்கள் குடும்பத்தில் பிரியம் உள்ளவர். அவர் சட்டமன்ற உறுப்பினரானது நம் தொகுதிக்குப் பெருமை. அவர் மேலும் மேலும் நல்ல பதவிகளைப் பெற வேண்டும்.

நகரத்தார் சமூகத்தைக் கல்வியில் பின்தங்கியோர் ஆக்க இவர்கள் இருவரும் (திரு. தென்னரசு. திரு. இராம நாராயணன்) முயற்சி செய்ய வேண்டும். நானும் முயற்சி செய்கிறேன்.

— டாக்டர்
எம். ஏ. எம். இராமசாமி




திரு. எஸ். எஸ். தென்னரசு

திரு. இராம. நாராயணன் என்னுடைய மாணவர். ஒரு ராணிப் பேட்டையைப் போல் ஒரு ராஜாப் பேட்டையை அவரால் உருவாக்க முடியும்.

திரு. தென்னரசு 30 ஆண்டுகளாகச் சிறுகதை எழுதி வருகிறார். திராவிட இயக்கத் தொண்டர்; திராவிடன் இதழாசிரியர். மூன்று முறை சிறை சென்றவர்.

— முனைவர் ஆறு. அழகப்பன்

கலைஞர் ஒரு ஆண்டவன். அவருக்குத் தொலை நோக்கு உண்டு. கலைஞருக்கு கலை, வலக் கண்; அரசியல், இடக் கண். 'தமிழனுக்காகவே வாழ்வேன்' என்று இரயிலில் தலை கொடுத்தவர் அவர்.



திரு. இராம. நாராயணன்

தென்னரசு 20 நாவல்கள், 100 சிறுகதைகளை எழுதியிருக்கிறார். அவர் எதிர்நீச்சல் போட முடியாதவர். குழந்தை உள்ளம் படைத்தவர். மக்கள் மன்றத்தில் பெருமையுடையவர் அவர் படைப்பிலக்கியத்தில் ஆய்வு செய்ய வேண்டும்.

— முனைவர் மெ. சுந்தரம்

"வாங்க... வாங்க" என்று அழைத்துப் பாராட்டுவதும் பின்னால் "தாங்க... தாங்க" என்று கேட்பதும் மனித இயல்பு.

— கண. சிற்சபேசன்

1961ல் தென்னரசுக்கு நான் அறிமுகமானேன். எங்கள் இருவரிடையிலும் நல்ல நட்பு உண்டு. தென்னரசு மேலவை உறுப்பினராக 6 ஆண்டுகள் இருந்தவர். ஆட்சியையே நடத்தியவர் அவ

ருக்குப் பதவி உயர்வு. சிறப்புக் கள் வரப்போவது உறுதி.

— சித. சிதம்பரம்

தென்னரசு அதிகம் கேள்விப் படுவார். குறைவாகவே பேசுவார். பெரிய பெரிய தலைவர்களோடு பழகியவர். படைப்பாற்றல் மிக்கவர்.

இராம. நாராயணன் எப் போதும் சிரித்தபடியே இருப்பார். ஆனால் அவரைச் சரியாக அறிந்து கொள்ள முடியாது.

— பழ. கருப்பையா

மாலை, என் கழுத்தில் விழுமென்று நான் நினைக்கவில்லை. மாப்பிள்ளைத் தோழனாகச் சென்ற என்னைக் கலைஞர் மாப்பிள்ளை ஆக்கி விட்டார்கள்.

— இராம. நாராயணன்

கலைஞர், மறக்க முடியாத உருவம் என்னுடையது. நட்பு தொடர வேண்டுமென ஆசைப் படுகிறேன். நானும் சித. சிதம்பரமும் 360 நாட்கள் ஒன்றாகச் சிறையில் இருந்திருக்கிறோம். அவரது இழப்பை விரைவில் ஈடு செய்வேன். 'தமிழ் நாட்டில் செட்டி நாடு' என்ற பெயரில் ஒரு நூல் எழுத இருக்கிறேன். அதற்கு டாக்டர் ஆறு. அழகப்பனும் பழ. கருப்பையாவும் உதவ வேண்டும்.

— எஸ். எஸ். தென்னரசு

நகரத்தார் பயிற்சி மையம் தொடக்க விழா

'நகரத்தார் பயிற்சி மையம்' என்ற அமைப்பின் நுழைவுத் தேர்வு பயிற்சி வகுப்புத் தொடக்க விழா 3-5-89 அன்று மதுரை. தியாகராசர் நன்முறை பள்ளியில் இனிது நடைபெற்றது. இவ்விழா விற்குத் தொழிலதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் தலைமை தாங்கி, திருவிளக்கு ஏற்றித் தொடக்கி வைத்தார்கள். செய்தி தொடர்புத் துறை அதிகாரி திரு. சொக்கு. சுப்பிரமணியன், மருத்து வர் திரு. கரு. கண்ணப்பன் தியாகராசர் நன்முறை மேல்நிலை பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி மேனகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இக் கூட்டத்தில் அமைப்பாளரான சட்டக்கல்லூரி மாணவர் திரு. இராமசாமி வரவேற்க ஒருங் கிணைப்பாளர் திரு. எஸ். சோமசுந் தரம் நன்றி கூறினார். இப் பயிற்சி மையத்தில் 43 மாணவர்களும் 12 மாணவிகளும் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.



காரைக்குடியைச் சேர்ந்தவரும் சிதம்பரம் இராமசாமிச்செட்டியார் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியருமான வெ. நாராயணன் செட்டியார் அவர்களுக்கும் திருமதி மீனாட்சி ஆச்சி அவர்களுக்கும் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 23-4-89 அன்று வயிரவன் பட்டி. நகரத்தார் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. மணிவிழாவிற்கு சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்ப சுவாமி ஆலய அறநிலைய நிர்வாகிகள் திரு. ஆறு இராமசாமி, திரு. மு. சிதம்பரம் காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு சித. சிதம்பரம் மற்றும் பல சான்றோர்கள் வருகை தந்து சிறப்பித்தனர்.

திருமணம்

சென்னை, அம்பத்தூர் நகரத்தார் மன்றத்தின் முன்னாள் தலைவரும் கொத்தமங்கலத்தைச் சேர்ந்தவருமான எம். எஸ்பி. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் M. Com.க்கும் கல்லுப்பட்டி சு. நா. சு. லெ. மெ. சீனிவாசன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சி B. A.க்கும் கல்லுப்பட்டியில் 8-5-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்களை வாழ்த்தி திரைப்பட இயக்குநர்கள் திரு எஸ்பி. முத்துராமன் திரு. எஸ். ஏ. சந்திரசேகர் வங்கி அதிகாரி திருமதி உமையாள் முத்து, ''நகரத்தார் குரல்'' துணை ஆசிரியர் திரு. எல் சுந்தரம் திரு. பி. கே. வேணுகோபால்ராவ், 'திருப்பாவை' திரு. ஏ. இராமசாமி, திரு. சோலையப்பன் திரு. சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர்.

திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமனும் திரு. எஸ். ஏ. சந்திரசேகரும் குடும்பத்தினரோடு வந்து கலந்து கொண்டனர். காரைக்குடித் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைராஜ் சென்னை மாநில எம். ஜி. ஆர். இளைஞர் அணிச் செயலாளர் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் மற்றும் தொழிலதிபர்கள், வணிகர்கள் திரையுலகத்தைச் சார்ந்தவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ தமிழ்த் திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன் ''கனி முத்துப் பாப்பா'' முதல் ''தர்மத்தின் தலைவன்'' வரை 63 தமிழ்ப் படங்களை இயக்கி இருக்கிறார்.

ஃ காவிரிப்பூர்பட்டினத்தில் இவ்வரண்டு 6-8-89 (ஆடி மீ 22 உ) முதல் 17-8-89 (ஆவணி மீ 1 உ) வரை பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா வழக்கம்போல் கொண்டாடப்பட உள்ளது.

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயிலின் மண்டலாபிஷேக விழா 11-5-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ காரைக்குடி திரு இராம. சுப்பையாவின் குடும்பத்தினருக்குச் சொந்தமான - சென்னையில் உள்ள கனிமுத்துப் பதிப்பகம் இதுவரை 23 நூல்களை வெளியிட்டுள்ளது.

ஃ நாட்டரசன்கோட்டை தீர்த்தார்குளம் தேசிக விநாயகர் கோயிலின் மண்டலாபிஷேக விழா 14-6-89 அன்று நடைபெற உள்ளது.

ஃ நகரக்கோயில்கள் ஒன்பதில் ஒன்றான இரணிக்கோயிலின் திருப்பணி வேலைகளை முடித்து 1-2-90 வாகில் குடநீராட்டு விழா நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

ஃ சிவகங்கையை அடுத்துள்ள சோழபுரம் அருண்மொழிநாதர் அறம் வளர்த்தாள் ஆலயக் குடமுழுக்கு விழா 10-9-89 (ஆவணி மீ 25 உ) நடைபெற உள்ளது.

ஃ திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமனின் தம்பி திரு வீரபாண்டியன் சென்னையில் உள்ள எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

ஃ நெற்குப்பை திரு. இராம. விசுவநாதன் மதுரை, கங்கை-காவேரி வாணிகத் தொடர்பு நிறுவனத்தின் சார்பாக 11-3-89 முதல் 25-3-89 வரை பாங்காக், ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்று வந்தார்.

ஃ புகழ் பெற்ற தமிழ்க் கவிஞர் பாரதிதாசனின் துணைவியார் திருமதி பழனியம்மாள் தமது 87 ஆவது வயதில் 21-5-89 அன்று புதுச்சேரியில் இயற்கை எய்தினர்.

ஃ நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயிலின் வைகாசித் திருவிழா 12-5-89 முதல் 21-5-89 வரை 10 தினங்கள் நடைபெற்றது.

ஃ காளையார் கோவில் ஸ்ரீ சௌந்தர நாயகியம்பாள் ஸமேத ஸ்ரீ சோமேசுவரர் திருக்கோயிலின் வைகாசித் திருவிழா 11-5-89 முதல் 20-5-89 முடிய 10 நாட்கள் நடைபெற்றது. இதனையொட்டி 14-5-89 முதல் 20-5-89 வரை சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஃ கோவிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த திருக்களர் ஸ்ரீ ஆண்டவரென்னும் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் 78ஆம் ஆண்டு குருபூஜை விழா 20-5-89 அன்று நடைபெற்றது.

காரைக்குடியில் ஐக்கிய சங்கக் கூட்டம்

சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் கூட்டம் அதன் தலைவர் டாக்டர் எம். ஏ எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் தலைமையில் காரைக்குடி க தெ. க அழ அ திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் இல்லத்தில் 7-5-89 அன்று மாலையில் நடைபெற்றது.

திரு எல் சோமு வரவேற்றுப் பேசினர். திருவாளர்கள் ப. லெட்சுமணன் இராம. நாராயணன், சித. சிதம்பரம், பழ. லெ பழநியப்பன், இராம. இராமநாதன் முனைவர் மெ. சுந்தரம் கவிஞர் செல்ல கணபதி போன்றவர்கள் கூட்டத்தில் தமது கருத்துக்களைக் கூறினர்கள்.

எல்லா நகரத்தார் சங்கங்களையும் ஐக்கிய சங்கத்துடன் இணைக்க வேண்டுமென்று திரு. மலையாண்டிச் செட்டியாரும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு முதியோர் இல்லம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று பள்ளத்தூர் திரு. அழகப்பனும் தெரிவித்தார்கள் 21 நகரத்தார் சங்கங்கள் ஐக்கிய சங்கத்துடன் இணைந்திருப்பதாக திரு ஏஆர். லெட்சுமணன் தெரிவித்தார்.

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் இக்கூட்டத்திற்கு திரு சித. சிதம்பரமும் திரு அ. திருநாவுக்கரசும் ஏற்பாடு செய்திருப்பதாகவும் நகரத்தார் சங்கங்களிலே திருச்சி சங்கமும் கோவை சங்கமும் சிறப்பாகச் செயல்படுவதாகவும் அந்த அளவிற்கு ஐக்கிய சங்கம் சுறுசுறுப்பாக இயங்கவில்லையென்றும் டாக்டர் எம் ஏ. எம். இராமசாமி அவர்கள் கூட்டத்தில் கூறினர்கள் ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டி சென்னையில் இடம் வாங்கி ஐக்கிய சங்கத்திற்குச் சொந்தமாக கட்டிடம் ஒன்று கட்டவும் வைப்பு நிதி மூலம் பல நல்ல காரியங்களைச் செய்யவும் விரும்புவதாயும் அவர்கள் மேலும் கூறினர்கள்.

ஐக்கிய சங்கத்திற்கு தாம் ஏற்கனவே ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடை அளித்திருப்பதாகவும் இப்போது ரூபாய் நான்கு இலட்சம் அளிப்பதாகவும் அதுபோல் மற்றவர்களும் நன்கொடை அளித்து உதவ வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்கள்.

தேநீர் விருந்திற்குப்பின் திரு. அ. திருநாவுக்கரசு நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

91/1

உங்கள் குரல்

மே மாதக் குரலில் வ. சுப. மாணிக்கனார், குழந்தைக் கவிஞரின் இரங்கற் செய்திகள், கட்டுரைகள் மற்றும் வாழ்க்கைக் குறிப்புகளைப் படித்து மெய் சிலிர்த்து விட்டோம். அப்பப்பா! எவ்வளவு கருத்துக்கள்! மதிப்பிற்குரிய நண்பர் லேனா அவர்களின் குழந்தைக் கவிஞர் பற்றிய கட்டுரை இதயத்தைத் தொட்டது

கனகு சுப்பு
கல்யாண்
நன்னிலம்

ஏப்ரல், மே'89 ''நகரத்தார் குரல்'' இதழ்களில் வெளியிட்டிருந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் பற்றிய கட்டுரைகள் அவர்களது சிறப்பை முழுவதுமாக வெளிப்படுத்தின. அக்கட்டுரைகளைப் படித்தபோது உடம்பெல்லாம் புல்லரித்தது.

அரு பழநியப்பன்
பட்டுக்கோட்டை

வ. சுப. மாணிக்கனருடன் ஒரு நாள்... சிறிய கட்டுரையானாலும் சிந்தனையைத் தூண்டியது. ''குரல்'' பற்றிய வ. சுப. மாவன்ற அவர்களின் எண்ணங்களை வெளியிட்ட குரலுக்கு நன்றி.

எஸ். நாகராஜன்
சென்னை

குழந்தைக் கவிஞர் பற்றிய திரு. லேனா, திரு. எஸ். எம். பழநியப்ப செட்டியாரின் கட்டுரைகளும் வ. சுப. மாணிக்கனர் பற்றிய திரு. சொ. சொ. மீ. சுந்தரத்தின் கட்டுரையும் உள்ளத்தை உருக வைத்து விட்டன.

வீர. கண்ணப்பன்
மதுரை

வ.சுப. மாணிக்கனர் மறைவு பற்றிய கட்டுரையும் பேராசிரியர் சொ. சொ. மீ சுந்தரம் அவர்கள் எழுதிய 'மறைந்த மாணிக்கம்' என்ற கட்டுரையும் அந்த மூதறிஞரின் மறைவுக்குச் செய்த சிறந்த அஞ்சலியாகும்.

எஸ். சபாபதி
திருச்சி-2

மூனைவர் வ. சுப. மாணிக்கனாரின் மறைவுச் செய்தியையும் கட்டுரைகளையும் படங்களையும் இவ்வளவு வேகமாக ஒரு மாத இதழ் வெளியிடும் என நம்பமுடியாது அதை நம்பும் வகையில் சிறப்பாகச் செய்துள்ள குரலுக்கு எனது பாராட்டுக்கள்.

ஆர் எம். கணேசன்
நாமக்கல்

பேரறிஞர் அண்ணாவுடன் வ. சுப. மாணிக்கனார் கவியரசு கண்ணதாசன் உள்ள படத்தை வெளியிட்ட குரல் எதையும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துவிட்டது.

வி. எஸ். சுப்பிரமணியன்
வலையபட்டி

''நகரத்தார் குர''லுக்குத் திருஷ்டி சுற்றிப் போடுங்கள். வர, வர இதழ் மெருகேறி வருகிறது. சலிப்புத் தட்டாமல் ஆர்வமுடன் படிக்க உதவுகிறது. வளர்க தொண்டு!

எம். கதிரேசன்
தஞ்சாவூர்

இயற்கை எய்தினர்

அகிலன் போன்ற எழுத்தாளர்களை முதலில் தமது ''அணிகலம்'' பத்திரிகையின் மூலம் அறிமுகப்படுத்தியவரும் முத்துவிழாக் கண்டவருமான தேவகோட்டை லெ. கதிரேசன் செட்டியாரவர்கள் தமது 84 ஆவது வயதில் 28-4-89 அன்று தேவகோட்டையில் இயற்கை எய்தினார்கள்.

நெற்குப்பை பள. பெரி. பெரி பழநியப்ப செட்டியார் அவர்கள் 12-5-89 அன்று காலை இயற்கை எய்தினர்கள்.

வ. சுப. சொக்கலிங்கம் செட்டியாருடன் நேர்முகம்

முதறிஞர், செம்மல், மூதுவர் வ. சுப, மாணிக்கனுர் அவர்களின் தம்பியும் சிறந்த தமிழன்பரும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இந் நூற்ருண்டின் தமிழ்ப் பெரியார்கள் பலருடனும் நெருங்கிய தொடர்புடையவருமான மேலைச் சிவபுரி வ. சுப. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களை மேலைச்சிவபுரியில் அவர்களது இல்லத்தில் 22-5-89 மாலையில் சந்தித்து உரையாடினேன். அப்போது அவர்கள் தனது அண்ணன் அமரர் வ. சுப. மாணிக்கனுரின் அருமை, பெருமைகளையும் அவர்களது அறிவாற்றலையும் எண்ணங்களையும், செயல்பாட்டினையும் எடுத்துரைத்தார்கள்.

நேர்முகம் கண்டபோது வ. சுப. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் கூறியதாவது:-

எனது அண்ணன் பெரிய அறிஞர், காந்தியவாதி காந்தியடிகளின் 'சத்திய சோதனை' ஆங்கில நூலை 100 முறைக்கும் மேலே படித்தவர்கள் வாக்கும் வாழ்வும் ஒன்ருக இருக்கவேண்டும் என்பார்கள். தன் கொள்கையில அழுத்தமான பிடிப்பு உடையவர்கள். பிரசாரம், விளம்பரம் என்ருல் பிடிக்காது.

மாணிக்கனுரும் நினைவாற்றலும்

இளமையில் படித்தது முழுவதும் அவர்களுக்கு மனப் பாடம். திருக்குறளின் 1330 குறள்களும், திருவாசகம் 600 பாடல்களும் தொல்காப்பியத்தின் 2500 சூத்திரங்களும் அவர்களுக்கு அத்துபடி. வெளியூர்களுக்குச் செல்கிறவர்கள்



முதறிஞர் வ. சுப. மாணிக்கனுர்

பணம் எடுத்துவைக்கிறமாதிரி இவர்கள் திருக்குறளையும் திருவாசகத்தையும் முதலில் பையில் எடுத்து வைப்பார்கள். சங்க இலக்கியம், திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களை தோல் பைண்டு செய்து வைத்துக் கொண்டு அவ்வப்போது படித்துப் படித்து பல வண்ணங்களில் அவற்றில் குறிப்பெழுதி வைத்துக் கொண்டு செயல்படுவார்கள்.

நூலாசிரியர்

காரைக்குடியில் இவர்களது இல்லத்தில் 4,000, 5,000 அரிய நூல்களை வைத்திருக்கிறார்கள். சென்னைக்குப் போனால் மூர்மார்க்கெட்டிலிருந்து தவறாமல் நல்ல நல்ல நூல்களை வாங்கிவருவார்கள். மூர்மார்க்கெட் தீவிபத்தில் எரிந்து போன போது மிகவும் வருத்தப்பட்டார்கள் மகாபாரதம், கம்ப இராமாயணம், திருக்குறள், திருவாசகம் ஆகியவற்றின் முதன் முதலில் அச்சான பிரதிகளை வாங்கி வைத்திருக்கிறார்கள்.

எனது அண்ணன் எழுதிய முதல் நூல் ''மனைவியின் உரிமை'' என்பதாகும். அதன் பின் அவர்கள் ஏராளமான நூல்களைப் படைத்திருக்கிறார்கள் திருக்குறளைப் பற்றி ஆய்வு செய்து ''வள்ளுவம்'' என்ற அருமையான நூலை எழுதியிருக்கிறார்கள் இதன முதல் பதிப்பு 1953ல் வெளியானது. இந்த நூலால் எனது அண்ணனுக்குப் பெருமை.

சொல்லாக்கம்

மறைமலை அடிகள், திரு. வி க., தேவநேயப்பாவாணர் போன்ற தமிழறிஞர்கள் புதுச் சொல்லாக்கம் ஏற்படுத்தினார்கள். அவர்களைத் தொடர்ந்து எனது அண்ணன் 500க்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களை உருவாக்கியிருக்கிறார்கள். 'வ. சுப. மாணிக்கனாரின் சொல்லாக்கம்' என்ற ஆய்வு நூலில் முனைவர் பழ. முத்துவீரப்பன் அவர்கள் அவை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எனது அண்ணன் எந்த நூலுக்கும் முன்னுரை, அணிந்துரை பெறுவது வழக்கமில்லை. படிக்கிறவர்கள் தெரிந்து கொள்ளட்டும் என்று விட்டு விடுவார்கள்.

அவர்கள் துணைவேந்தராக இருந்த போது பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தவிர மற்ற துறைகளிலும் அதிகக் கவனம் செலுத்தினார்கள். மலேஷியாவிற்குப் பலமுறை சென்று வந்திருக்கிறார்கள் ஜப்பான், அமெரிக்கா, கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் சென்று வந்திருக்கிறார்கள்.

தமிழ் வழிக் கல்வி

மழலையர் கல்வி முதல் பட்டமேற்படிப்பு வரையும் பொறியியல் துறை, மருத்துவத் துறை உட்பட எல்லாமே தமிழ் மொழியில்தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதில் தீவிர அக்கறையுடையவர்கள். ''இலங்கை, மலேஷியா மற்றும் பல நாடுகளில் அவரவர் தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்கும்போது நாம் ஏன் நமது தாய் மொழியான தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்ளக்கூடாது'' என்பார்கள். தமிழுக்கு முதன்மை - அடுத்து ஆங்கிலத்தைத் துணை மொழியாகக் கொள்ளலாம் என்ற கருத்துடையவர்கள்.

பண்டிதமணியின் பரிந்துரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'வித்வான்' படிப்பு முடித்த எனது அண்ணனை பண்டிதமணி அவர்கள் ராஜா

சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களிடம் அழைத்துச் சென்று "இவன் மிகப்பெரிய தகுதியுடையவன். இவனையும் எங்களுடன் பணியாற்ற அனுமதிக்க வேண்டும்" என்று கேட்க, ராஜா அவர்களும் அதுபோல உடனடியாக எனது அண்ணனை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்த்துக் கொண்டார்கள்.

பண்டிதமணியின் நூல்கள் - மறுபதிப்பு

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரின் மாணவரான என் அண்ணன் பண்டிதமணியின் நூல்கள் எங்கும் பரவ வேண்டும் என விரும்பி அவர்களது நூல்கள் மறுபதிப்பு வெளிவர ஆவன செய்தார்கள். அதற்காகப் பூலாங்குறிச்சி வி. எஸ். சிவலிங்கம் செட்டியார், கோட்டையூர் அ. க. அ. சித. அழ சிதம்பரம் செட்டியார், பனையப்பட்டி சுப. அ. நடராசன் செட்டியார், குளிபிறை பெரி. தியாகராசன் செட்டியார், மேலைச்சிவபுரி அ. சுப. அண்ணாமலைச் செட்டியார், மேலைச்சிவபுரி ராம. முத்தப்பன் பொன்னாச்சி நா. மகாலிங்கம், புலவர் வெள்ளைவாரணர் போன்ற பெருமக்களிடம் நிதி உதவி பெற்று வெளியிடச் செய்தார்கள்.

பண்டிதமணி நினைவாக அறக்கட்டளை

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பணியாற்றிய காலத்தில் பண்டிதமணியின் நினைவாக அங்கு அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கான முழு நிதி உதவியையும் தேவகோட்டை சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆசிரியருக்கு மாணவன் செய்த நன்றிக்கடன் இது.

வள்ளல் அழகப்பர் பற்றிய "கொடை விளக்கு"

வள்ளல் டாக்டர் அழகப்பர் இறந்தவுடன் 170 வெண்பாக்களுடன் "கொடை விளக்கு" என்னும் அரியதொரு நூலை எனது அண்ணன் எழுதி வெளியிட்டார்கள். அழகப்பரின் புகழை நிலைநிறுத்தும் சொற்கோவிலாக அந்நூல் நிலவுகிறது.

மாணிக்கனாரின் எண்ணங்கள்

மேலைச்சிவபுரியில் மழலையர் பள்ளி முதல் எம். ஏ. (முதுகலை) வரை வகுப்புகள் உள்ளன. பிளஸ் டூ வகுப்பு இல்லை. இந்த ஆண்டு அதைக் கொண்டு வர பெருமுயற்சி மேற்கொண்டிருந்தார்கள்.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் இந்த வைகாசியில் கருத்தரங்கக் கூடம் ஒன்று அமைக்கவும் நூல்நிலையக் கட்டிடம் ஒன்று ஏற்படுத்தவும் திட்டமிட்டிருந்தார்கள். எண்ணங்கள் நிறைவேறும் தருவாயில் அவர்கள் காலமாகிவிட்டார்கள்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை. மாறாக எதிர்த்துக் குரல் எழுப்பினார்கள். கருவிகளுக்குத் தக்கவாறு தமிழ் எழுத்துக்களை மாற்ற வேண்டுமென்ற கருத்தை அவர்கள் எதிர்த்தார்கள். "கருவிகள் அடிக்கடி மாறக் கூடியவை. அதற்கேற்றவாறு தமிழ் எழுத்துக்களை மாற்றிக் கொண்டே போனால் என்னாவது?" என்பார்கள். "உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் கருவிகளுக்கு ஏற்ப எழுத்துக்களை மாற்ற வேண்டுமென்ற சிந்தனை இல்லை" என்பார்கள். இந்தப் போக்கு தமிழ் மொழியையே அழித்து

விடும் என்று உறுதியாக நம்பி அதைத் தம் வாழ்க்கைப் போராட்டமாகக் கொண்டிருந்தார்கள். இப்போது உள்ள நர்சரிப் பள்ளிகளுக்கு எதிரானவர்கள். முதலில் தாய் மொழியையும் பின்னால் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம் என்பார்கள்.

தமிழ் வழிக் கல்வி இயக்கம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அவர்கள் திருக்குறளுக்குப் புத்துரை எழுதுவதையும் திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் போன்றவற்றை ஆய்வு செய்ததையும் பாதியிலேயே நிறுத்தி விட்டார்கள்.

— இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

மேலைச்சிவபுரி வ. சுப்பையா செட்டியார்-தெய்வானை ஆச்சி தம்பதிக்கு வ. சுப. திருப்பதி செட்டியார். வ. சுப. மாணிக்கம் செட்டியார் வ. சுப. சொக்கலிங்கம் செட்டியார் என மூன்று பிள்ளைகள்; மீனாட்சி ஆச்சி, சிட்டாள் ஆச்சி எனஇரு பெண்கள் இவர்களில் வ. சுப. மா. வும் மீனாட்சி ஆச்சியும் இப்போது இல்லை. அமரர் வ. சுப்பையா செட்டியார் அவர்கள் நாகபட்டினம் வெளிப்பாளையத்தில் மர வணிகமும் இரயில்வே காண்ட்ராக்ட் வேலைகளும் செய்து வந்தார்கள் மூதறிஞர் இராஜாஜியின் நண்பர்.

நேர்முகம் : எல். சுந்தரம்

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமியின் அறக் கொடைகள்!

ஆன்மீக சமூக, பொதுநலத் தொண்டாற்றிவரும் நகரத்தார் பெருமக்கள் ஒன்பது பேருக்கு 18-5-89 அன்று வலையபட்டியில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் தலைமையேற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள், அப்போது இரு அறக்கொடைகளை மகிழ்ச்சியுடன் அறிவித்தார்கள்.

ஒன்று: ''வலையபட்டி நகரத்தார்கள் பரிந்துரை செய்யும் நகரத்தார் இனத்தைச் சேர்ந்த ஏழைப் பையன் ஒருவனுக்கு ஒவ்வொரு ஆண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் (B. E.) கல்வி கற்க 'சீட்' கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்''

இரண்டு: ''ஒருவருக்கு ரூ 2000/- வீதம் பாராட்டுப் பெறும் ஒன்பது பேர் சார்பாக ரூ 18,000த்தை நன்கொடையாக அளிக்கிறேன். அந்த நிதியை டெபாசிட்டாக வைத்துக் கொண்டு 9 ஏழைப் பிள்ளைகளைப் படிக்கவைக்க ஏற்பாடு செய்யுங்கள்.''

வி. என். சிதம்பரம் பேச்சு

வலையபட்டி நகரத்தார்களின் திருவடிகளை வணங்குகிறேன். நகரத்தார்களுக்கு ஒரே தலைவர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள்தான். அவர்கள் தலைமையில் சிறப்பாக இயங்கக் காத்திருக்கிறோம். வலையபட்டியில் அவர்கள் தலைமையில் ஒரு மாநாடு கூட்டவேண்டும். அதைத் தெரிவிக்கவேண்டியது நம் கடமை. நான் கடைசித்தொண்டனாக இருந்து பாடுபடக் காத்திருக்கிறேன். நாம் ஆண்டுக்கு ஒருமுறை கூட வேண்டும்; பிரச்னைகளைப் பற்றிப் பேச வேண்டும்.

இதுபோன்ற பாராட்டு விழாக்களை நடத்துவது சிறப்பான காரியம்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(வலையபட்டியில் 18-5-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் ஏற்புரை நல்கியபோது கூறியது)

வலையபட்டியில் நகரத்தார் பெருமக்கள் ஒன்பது பேருக்குப் பாராட்டு விழா!

தொண்டுள்ளம் கொண்ட, ஆன்மிக, சமுக, பொதுநலத் தொண்டுகள் பல ஆற்றிய, வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த ஒன்பது நகரத்தார் பெருமக்களுக்கு (திருவாளர்கள் பழ. கு குப்பான் செட்டியார், தே. இராமநாதன் செட்டியார், குப. கரு. ராம. மூத்துக்கருப்பன் செட்டியார், வலம்புரி முத்து, மு. மு. நா. லெட்சுமணன் செட்டியார், வி. என். சிதம்பரம் செட்டியார், மூ. ப. மு. ராம சேதுராமன் செட்டியார் நாக. இராம. இராமசாமிச் செட்டியார், சோம. இயற்பகை செட்டியார்) வலையபட்டி நகர விடுதியில் 18-5-89 மாலையில் ஓர் புதுமையான பாராட்டு விழா சிறப்பாக நிகழ்ந்தது. வலையபட்டி நகரத்தார் சார்பாக நடைபெற்ற இம்மாபெரும் பாராட்டு விழாவிற்கு நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் தலைவரும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தரும் தொழிலதிபருமான டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் தலைமையேற்றார்கள்.

மழை, காற்று காரணமாக விழா கொஞ்சம் தாமதமாக மாலை 6-20க்குத் தொடங்கியது. திரு. எஸ். என். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் இறைவணக்கம் பாடினார். கதை, வசனகர்த்தாவும் திரைப்பட இயக்குநருமான திரு. வலம்புரி சோமநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு மு. பழ இராம. பழனியப்பன் விழாத் தலைவரைப்பற்றி அறிமுக உரை ஆற்றினார். அப்போது டாக்டர் எம் ஏ எம், இராமசாமி அவர்கள் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றவர் என்றும் அவர் கல்வித் திருக்கோயில் என்றும் பல துறைகளில் முத்திரை பதித்து சாதனை நிகழ்த்தியவர் என்றும் அவர் பாராட்டுரை வழங்கினார். பேராசிரியர் 'முத்தமிழ்மணி' திரு. கதி. சுந்தரமும் தாலாட்டுக் கவிஞர் வேந்தன்பட்டி திரு. T. சுமரப்பனும் பாராட்டுப் பெறுவோரை அறிமுகப்படுத்தினர். தலைவர் அவர்கள் ஒன்பது நகரத்தார் பெருமக்களுக்கும் வாழ்த்துப் பாக்களை அளித்து பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்கள்.

எம். ஏ. எம். இராமசாமி

டாக்டர் எம். ஏ, எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

நகரத்தார் ஊர்களிலேயே சிறந்த ஊர் வலையபட்டி என என் தந்தையார் சொல்வார்கள். ஒன்பது என்பது மங்களகரமான ராசியான எண். ஒன்பது நகரக் கோயில்கள். ஒன்பது நவமணிகள் என்று ஒன்பதுக்குச் சிறப்புகள் நிறைய உண்டு வலையபட்டி நகரத்தார்கள் விரிந்த நெஞ்சம் படைத்தவர்கள். வலையபட்டி நகரத்தார் தவிர மற்ற ஊர்க்காரர்களுக்கும் இங்கு பாராட்டு நடைபெறுவதே அதற்குச் சான்று.

என் தந்தையார் நகரத்தாரோடு அதிக ஈடுபாடு கொண்டவர்கள். நகரத்தார் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று அடிக்கடி சொல்வார்கள் அதுவே எனது கடமை. அவர்களுடைய வழியில் நானும் செல்வேன்.

நான் தினமும் 18 படிகள் ஏறுபவன். ஐயப்பனை வணங்காமல் ஒரு காரியமும் செய்வதில்லை. வலையபட்டி நகரத்தார்கள் தொழில் சிந்தனை உடையவர்கள். இங்குள்ள யூனியன் கிளப் நன்கு நடைபெறுவதாக அறிகிறேன். உங்களுக்கு ஒருகுறையும் வராது. இன்று மழை கூட வந்துவிட்டது. இந்த விழா ஒரு வழிகாட்டி. இது போல் மற்ற ஊர்களிலும்

பாராட்டு விழாக்கள் நடைபெற வேண்டும். நல்லவர்களைப் பாராட்ட வேண்டும்.

— இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

அடுத்து முனைவர் திரு. தமிழண்ணல், முனைவர் திரு. சுப. அண்ணாமலை பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், முனைவர் திரு. பழ. முத்தப்பன், புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

முனைவர் தமிழண்ணல்

முனைவர் தமிழண்ணல் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:-

இது முன்மாதிரியான பாராட்டு விழா. 'முன்னேறியவர்கள்' என்ற முத்திரை நமக்குப் பெரும் இடையூறாக இருந்து வருகிறது அது நீக்கப்பட்டால்தான் நமக்கு விடிவு காலம். நம்மவர்கள் பெரும் பதவிகளில் இருந்து வருவதற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு காரணம். நமக்கு என்ன தேவை என்று உணர்கிற தலைவர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள். அவர்களது அறிவிப்புகள் கண்டு மனம் நெகிழ்ந்து நிற்கிறேன். உங்கள் காலத்தில இந்தச் சமூகம் முன்னேறும் என்று நம்புகிறேன்.

'நகரத்தார்' என்றால் எங்கும் மரியாதை கிடைக்கிறது. நம் வீட்டில் வளர்ந்துவரும் பெண் குழந்தையைப் பார்க்கிறபோது தான் சங்கடமாக இருக்கிறது. நாம் நமக்காக மட்டும் வாழவில்லை. இதுதான் நம்மிடம் உள்ள சிறப்பு.

பெண்களின் கண்ணீர் மிகக் கொடுமையானது. பார்ஸி இனத்தைப் போல நமக்கென்று 10 கோடி ரூபாய்க்கு அறக்கட்டளை ஏற்படுத்தி ஏழைப் பெண்களின் கண்ணீர் நீக்கப் பாடுபடவேண்டும். என் வாழ்நாளில் இது நிறைவேறினால் நான் மனக்குறை இல்லாமல் சாவேன். வலம்புரியில் ஊதினால் அது வெற்றிச்சங்காக அமையும்.

— இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

முனைவர் சுப. அண்ணாமலை

அடுத்து முனைவர் சுப, அண்ணாமலை அவர்கள் பேசுகையில் கூறியதாவது:-

வலம்புரி நகரத்தார்கள் ஒன்பது விழாக்களை ஒன்றாக நடத்துகிறார்கள். விக்கிரமாதித்தன் பேரவையில் ஒன்பது பேர் இருந்தார்கள். முதற் சங்கத் தமிழில் ஒன்பதுக்கு 'தொண்டு' என்று பெயர், பதக்கம் போன்ற இந்த விழாவில் எம். ஏ. எம் இராமசாமி அவர்கள் நாயகமணியாக இருக்கிறார். தொண்டு தொண்டை வளர்க்கிறது. டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் இரண்டு அறக் கட்டளைகளை அறிவித்திருக்கிறார்கள். பாராட்டுக்கள். அறச் செயல்கள் வளரவேண்டும். உள்ளம் பெருகினால் செல்வம் பெருகும்.

— இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

சொ. சொ. மீ. சுந்தரம்

அடுத்து பேராசிரியர் சொ. சொ மீ சுந்தரம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:-

இத்தனை பெருமக்களையும் நடுத்தெருவில் பாராட்டக்கூடாது என்பதற்காக மழையையும், காற்றையும் கொண்டுவந்த மலையாண்டி விநாயகரைப் பாராட்டுகிறேன். இந்த மண்டபத்தில் 12 தூண்கள் உள்ளன. அவற்றை

12 பெரியவர்களாகக் கருது கிறேன். ஆக 12 பெரியவர்களுக்கு மத்தியில் ஒன்பது பெருமக்களுக் குப் பாராட்டு விழா நடைபெறு கிறது. தலைவரையும் சேர்த்துப் பத்துப்பேரை ஒரு சேரப் பார்க் கும் போது இந்தச் சமூகத்திற்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது என எண்ண முடிகிறது.

— இவ்வாறு அவர்கள் கூறி னார்கள்.

பாராட்டுக்கு வி. என். சிதம் பரம் செட்டியார் அவர்களும், தே. இராமநாதன் செட்டியார் அவர்களும், மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார் அவர் களும், வலம்புரி மூத்து அவர் களும் ஏற்புரை நல்கினார்கள்.

இவ்விழாவில் வலையபட்டி யூனியன் கிளப் சார்பாகவும் திரு நெல்வேலி நகரத்தார் நண்பர்கள் சார்பாகவும் மதுரை சோஷியல் ரெக்ரியேஷன் கிளப் சார்பாகவும் வலையபட்டி திரு. எஸ் எம். நட ராஜன் செட்டியார் சார்பாகவும் வலையபட்டி அருள்மிகு மலை யாண்டி கோவில் சிப்பந்திகள் சார்பாகவும் பழநிப் பாத யாத் திரைக் குழு சார்பாகவும் தலைவ ரும் பாராட்டுக்குரியவர்களும் கௌரவிக்கப் பெற்றனர்.

திரு. பி.எல். குமரப்ப செட்டி யார் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. விழாவில் பங்கு பெற்ற அனைவருக்கும் இரவு யூனியன் கிளப்பில் விருந்தளிக்கப் பெற் றது.

திருமணம்

அரண்மனை சிறுவயல் சுப. கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. மாணிக் கம் செட்டியாரின் புதல்வியுமான செல்வி அலர்மேலுவுக்கும் பாக னேரி கரு. சுப வே. திருநாவுக் கரசு செட்டியார் அவர்கள் புதல் வன் செல்வன் சுப்பிரமணியன் என்ற செல்வம் B A க்கும் அரண்மனை சிறுவயலில் 25-5-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

உ. சிறுவயல் தமிழ் இலக்கிய மன்றத்தில் முப்பெரும் விழாக்கள்

உ. சிறுவயல் தமிழ் இலக்கிய மன்றத்தின் 26 ஆம் ஆண்டு விழா, கவியரசு கண்ணதாசனின் ஏழாம் ஆண்டு விழா பாரதிதாசன் நூற்றாண்டுத் தொடக்க விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் உ. சிறுவயல் கம்பன் அடிப்பொடி அரங்கத்தில் 7 & 8-5-89 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றன.

முதல் நாள் விழாவிற்கு டாக்டர் மா. வரதாராஜன் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் சொ. லெ. அழகப்பன் வரவேற்புரை ஆற்றினார். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் படம் திறந்து வைக்கப் பெற்றது 40 ஆண்டு காலச் சேவை செய்த கவிஞர் கே. துரைராஜுக்குப் பொன்னாடை அணிவிக்கப் பெற்றது. செல்வி நா. கண்ணகி, இராம. தீபா, அண. சிவகாமி, மாவட்ட ஜனதாதளத் தலைவர் மு. சிதம்பரபாரதி ஆகியோர்பேசினர். பின்னர் தாமரைக்குளம் மு. இராசரெத்தினம தலைமையில் 'கவியரசு கண்ணதாசன் கவிதைகளில் விஞ்சி நிற்கும் உணர்வு எது' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நிகழ்ந்தது. கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வென்ற மாணவ, மாணவியருக்கு சி. பா. ஆதித்தனார் நினைவுப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

இரண்டாம் நாள் காலை 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடந்தது. தாரமங்கலம் கவிஞர் வேலு தலைமை தாங்கினார். கூத்தகுடி சண்முகம் தொடக்க உரை ஆற்றினார்.

இரண்டாம் நாள் மாலை பாத்திரங்களாக வேடமிட்டுப் புலவர்கள் வாதிட்ட புதுமையான நீதிமன்ற நிகழ்ச்சி சுவையாக நடந்தது. முத்துப்பேட்டை ந. தருமலிங்கம் தொடங்கி வைத்தார். நீதிபதியாக பூம்புகார் டாக்டர் ஆ. செகநாதனும், பதிவாளராக அம்பத்தூர் இராம. சோலையப்பனும், திருவள்ளுவராக எம். கே. சுப்பிரமணியனும் கலந்து கொண்டனர். கர்ணனாக வந்த பாஸ்கரபால் பாண்டியன், தருமராக வந்த மக்கள் கவிஞர் அரு. நாகப்பன், கண்ணனாக வந்த பழநிச்சிங்காரவேலு ஆகியோர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. இவர்களுக்காக சு. சரசுவதி, இரா. அன்பழகன், புனிதா ஏகாம்பரம் ஆகியோர் வழக்கறிஞர்களாக வாதிட்டனர். இறுதியில் மூவரும் குற்றமற்றவர்கள் என்று நீதிபதி ஜெகநாதன் தீர்ப்புக் கூறினர்.

அதன் பிறகு பரிசளிப்பு விழா நடந்தது. திரு. லெ. சண்முகம் செட்டியார் தலைமை வகித்தார் மக்கள் கவிஞர் அரு. நாகப்பன் வரவேற்புரை ஆற்றினார். சோ. கணேஷ்குமார் என்ற ஊனமுற்ற மாணவனுக்கு 3 சக்கர சைக்கிள் வண்டியையும், 20 ஏழைத் தாய்மார்களுக்கு இலவசச் சேலைகளையும் மன்றம் சார்பாக "தேவி" "மாலைமுரசு" நிருவாக ஆசிரியர் பா. இராமச்சந்திர ஆதித்தனர் வழங்கினர். திரு. கண. சிற்சபேசன், திரு. லெ. சபாரெத்தினம் செட்டியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மன்ற நிதிக்கு திரு. லெ. சபாரெத்தினம் செட்டியார் ரூ. 5000மும், கண. சிற்சபேசன் ரூ. 500ம் வழங்குவதாக அறிவித்தார்கள்.

ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பெரி. முருகப்பன் அம்பலம் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது.

சொற்கேட்டான் விநாயகர் கோயில் !

நகரக் கோயில்களில் ஒன்ருன வேலங்குடிக் கோயில் அருகே சொற்கேட்டான் விநாயகர் கோயில் இருக்கிறது. இது 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது ,பொங்கல் பிள்ளையார்' என்றும் இதற்குப் பெயர் உண்டு. இக் கோயிலுக்குக் கூரை இல்லை. எனவே ஆகாசவிநாயகர் என்ற பெயரும் இதற்கு நிலவுகிறது. நாம் சொல்லுவதை 'ம்' 'ம்' என்று கேட்பதால் சொற்கேட்டான் என்ற பெயர் இவ்விநாயகருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இவ்விநாயகர், மிகவும் உக்கிரமாக இருந்தார் என்றும் அந்த உக்கிரத்தை ஆன்மீகப் பெரியவர் ஒருவர் வந்து தணித்தார் என்றும் சொல்கிருர்கள் சாதி வேறுபாடு இல்லாமல் அனைவரும் இப்பிள்ளையாருக்குச் சிதறு தேங்காய் உடைத்து இதை வழிபடுகின்றனர்.

இக்கோயிலைச் சேர்ந்த ஊரணி வற்றுவதில்லை. அதனுல் இதைத் 'தூர்' எடுக்க இயலாது. இந்த ஊரணியும் இதன் அருகேயுள்ள தேசிக நாராயணப்பெருமாள் கோயிலும் வேலங்குடி நகரக் கோயில் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

நன்றி: கோட்டையூர்
குட நீராட்டு மலர்-1980
— ராம. வ. இராமசாமி
கோட்டையூர்.

சதாபிஷேகம்

பி. அளகாபுரி க தெ. நாராம, தெ. தேனப்ப செட்டியார் அவர்களின் சதாபிஷேக விழா பி. அளகாபுரியில் 21-5-89 அன்று சிறப்பாக நடைபெற்றது.

செய்தி

ஈரோடு அருள்மிகு பெரிய மாரியம்மன் கோயில் பொங்கல் தேர்த் திருவிழாவை முன்னிட்டு 6-4-89 முதல் 8-4-89 வரை 3 நாட்கள் ஈரோடு நகரத்தார் சங்கத்தினர் பொது மக்களுக்கு நீர் மோர், பானகம் வழங்கினர்.


மக்கமடை அய்யனர் கோயிலில் குட நீராட்டு

வயிரவன்பட்டி அருகில் உள்ள மக்கமடை அய்யனர் கோயில் குட நீராட்டுவிழா சுக்கில ஆண்டு ஆனி மாதம் 8ஆம் நாள் (22-6-89) வியாழக்கிழமை காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது. 19-6-89 அன்று யாக சாலைப் பூஜை தொடங்குகிறது.

சுவீகாரம்

தேவர் திருமகன் மாவட்டம், சொக்கநாதபுரத்தில் பிறந்த பிள்ளையார்பட்டிக் கோவிலைச் சேர்ந்த 20 வயதுள்ள பிளஸ் 2 படித்துள்ள பையன் சுவீகாரம் விடுவதற்கு இருக்கிருர். விருப்பமுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதலாம்:-

பெட்டி எண்: 138
C/o "நகரத்தார் குரல்"
25 வடக்குச் சித்திரை வீதி
மதுரை-625 001



காரைக்குடியில் 7-5-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் முனைவர் திருமதி இராதாதியாகராசன் அவர்கள் பாராட்டுரை வழங்குகிறார்கள். அருகே (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் லெ. நாராயணன் செட்டியார், இராம. நாராயணன் தலைவர் டாக்டர் எம். ஏ. எம், இராமசாமி, எஸ், எஸ். தென்னரசு.

காரைக்குடியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டு விழா

காரைக்குடி மகர் நோன்பு அக்ரஹாரத்தில் உள்ள சுனிதா ஹாலில் 7-5-89 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ். தென்னரசுக்கும் திரு. இராம. நாராயணனுக்கும் பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இரவு 7-00 மணிக்குத் தொடங்கிய விழா 10-30 வரை நடைபெற்றது. திரு. ஏ. திரு நாவுக்கரசு வரவேற்றுப் பேசினார். டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திருமதி இராதா தியாகராசன், தொழிலதிபர் திரு லெ. நாராயணன் செட்டியார், பேராசிரியர் முனைவர் திரு ஆறு. அழகப்பன், முனைவர் திரு. மெ. சுந்தரம், திரு. எஸ். வி. என். நாகப்பன், திரு எம் சிதம்பரம், திரு கண. சிற்சபேசன், திரு. சித. சிதம்பரம், திரு பழ. கருப்பையா ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள். திரு. ஏ.

கதிர்வேல் வாழ்த்துப்பா வாசித்தளித்தார்.

பாராட்டு விழாக் குழு சார்பாக டாக்டர் எம். ஏ. எம். இராமசாமிச் செட்டியார் அவர்கள் திரு. எஸ். எஸ். தென்னரசுக்கும் திரு. இராம. நாராயணனுக்கும் பொன்னாடை, மாலை அணிவித்தார்கள். இருவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

திரு. எஸ் எஸ் தென்னரசும் திரு. இராம நாராயணனும் ஏற்புரை நல்கினார்கள். திரு. எஸ். கே. கணபதி நாடார் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

தே. இராமநாதன் செட்டியாரின் ஏற்புரை

டாக்டர் எம். ஏ. எம், இராமசாமி அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்குவது எங்கள் பாக்கியம். நானும் அவர்களும் புதுக்கோட்டையில் ஒன்றாகப் படித்தவர்கள் நான் யூனியன் கிளப்பில் 25 ஆண்டுகள் செயலாளராகச் சேவை செய்து வருகிறேன். 31 ஆண்டுகள் பொன்னமராவதி பேரூராட்சியில் உறுப்பினராக இருந்து வருகிறேன். யூனியன் கிளப் மூலம் எங்களால் முடிந்த அளவு நல்ல தொண்டுகளைச் செய்து வருகிறோம். வி. என். சிடி. அவர்கள் கூறியது போல மாநாடு நடத்த வேண்டுமென நானும் விரும்புகிறேன்.

— தே. இராமநாதன் செட்டியார்

(வலையபட்டியில் 18-5-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் ஏற்புரை நல்கியபோது கூறியது)

திருஞானசம்பந்தர் குருபூஜை

தேவகோட்டையில் உள்ள பழைமை வாய்ந்த காட்டுத் தண்ணீர்ப் பந்தல் நால்வர் குருபூஜை மடத்தில் திருஞானசம்பந்தர் குருபூஜை 23-5-89 அன்று சிறப்பாக நிகழ்ந்தது.

அக் குருபூஜை மடத்தினை நிறுவிய கட்ட முருகப்ப செட்டியார் குடும்பத்தின் சார்பாகக் "காசிஸ்ரீ" திரு. அரு. சோமசுந்தரம் அனைவரையும் வரவேற்றுக் கவியரங்கிற்குத் தலைமை தாங்கினார். கவிஞர்கள் கா. நாகப்பன், வெ. பழனியப்பன் இராம. வீரப்பன், சேது அருணசலம், மீனவன் உமா, மங்கையர்க்கரசி மீனாட்சி, லெட்சுமணன், சோலையப்பன் ஆகியோர் திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாற்றைக் கவியாகப் பாடிச் சிறப்பித்தனர். காசிஸ்ரீ சித. சிதம்பரம் செட்டியார் பூசனை செய்தார்.

சேதுராமன் செட்டியாரின் ஏற்புரை

உயர்ந்த தந்தைக்கு உயர்ந்த மகன், டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள். 60 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி தேவை என்பதை அறிந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஏற்படுத்தினார்கள். தொண்டுள்ளம் என்பது நமக்கு இயற்கையாகவே கிடைத்தது. ஒரு மனிதன் இத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல; அவன் வாழ்ந்த காலத்தில் என்ன செய்தான் என்பது தான் முக்கியம், வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப் பாராட்டினால் தான் மேலும் மேலும் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு வரும்.

— மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார்

(வலையபட்டியில் 18-5-89 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் ஏற்புரை நல்கியபோது கூறியது)

நேமங் கோயில் சிலைகள் பிடிபட்டன!

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் குன்னக்குடி அருகே நேமம் கிராமத்தில் உள்ள நேமம் கோவிலில் இருந்த ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள 8 ஐம்பொன் சிலைகள் 1-4-89 அன்று களவாடப் பட்டன. சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸ் சி. ஐ. டி. பிரிவு சூப்பிரண்டண்ட் திரு. டி. எஸ். பஞ்சாபகேசன் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட 13பேர் கொண்ட சிறப்புப் போலீஸ் படை, துப்புத் துலக்கி 29-4-89 அன்று களவு போன மேற்படி 8 ஐம்பொன் சிலைகளையும் கைப்பற்றி இருவரைக் கைது செய்துள்ளனர்.

சென்னையில் மேற்படி சிலைகளை வாங்கிக் கொண்டு பணம் தருவதாக ஒரு நபரை நடிக்கச் செய்து தந்திரமாக மதுரை ஸ்காட் ரோடில் அவற்றை மடக்கிப் பிடித்தனர்.

குழந்தைக் கவிஞரின் மறைவுக்கு அஞ்சலிக் கூட்டம்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் மறைவையொட்டி குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் 25-4-89 அன்று அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஏவி. எம். சரவணன், திரு. ஸ்ரீபால் ஐ. பி. எஸ். திரு. தணிகை உலகநாதன், திரு. ஔவை நடராசன், திரு. கூத்தபிரான், திரு பூவண்ணன், திரு. ஹரிஹரன், திரு. எஸ். நாச்சியப்பன (அழ வள்ளியப்பா அவர்களின் மாப்பிள்ளை) மற்றும் பலர் குழந்தைக்கவிஞரின் குணநலன்கள், குழந்தை இலக்கியத் தொண்டு ஆகியவை பற்றிப் புகழுஞ்சலி செலுத்தினார்கள். கு. எ. சங்கப் பொதுச் செயலாளர் திரு. மாயன் நன்றி கூறினார்.

அறிஞர்களின் பார்வையில் பெண்கள்

பெண்களுக்கு பலம் குறைவு தான். ஆனல் அவர்களுக்கு உள்ள துணிவு ஓர் ஆணுக்கு உள்ளதை விட அதிகம்.

— மகாத்மா காந்தியடிகள்

தியாகம் செய்வது என்பதை ஆண்கள் ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் பெண்களுக்கு அதுவே தொழில்.

— டாக்டர் இராதாகிருஷ்ணன்

கற்புடைய மாதரிடம் மென்மையும் உண்டு; மனத்திண்மையும் உண்டு. பொறுக்கும் திறமும் உண்டு. மாறுபட்டோரை ஒதுக்கும் திறமும் உண்டு.

— டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை

மேனுமினுக்கியைக் கொண்டவனும் கெட்டான்; மேட்டிலே பயிரிட்டவனும் கெட்டான்.

— கரியமுத்துப் புலவர்

தொகுப்பு:
அண. அண்ணாமலை
சென்னை

உருவு கண்டு எள்ளாமை வேண்டும்

சுவாமி விவேகானந்தர் ஒருமுறை புகைவண்டியில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். பெட்டி படுக்கையின்றி, உணவின்றி சுவாமி விவேகானந்தர் பயணம் செய்தது. அவ்வண்டியிலே பயணம் செய்த இரண்டு ஆங்கிலேயர் களுக்கு வியப்பைத் தந்தது. இரந்துண்ணும் பக்கிரிக்கு தாங்கள் பேசும் ஆங்கிலமொழி எவ்வாறு தெரியும் என்றெண்ணி அவர் கள் சுவாமிகளைக் குறித்துப் பரிகாசமாய்ப் பேசிக் கொண்டே வந்தனர். சுவாமிகளும் ஒன்றும் தெரியாதவர்போல் அவற்றைக் கேட்டுக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார்.

நெடுந்தூரம் சென்றபின் ஓரிடத்தில் வண்டி நின்றபோது ''அருந்துவதற்கு நல்ல தண்ணீர் எங்கு கிடைக்கும்?'' என்று புகைவண்டி நிலைய அதிகாரி ஒருவரை சுவாமிகள் ஆங்கிலத்தில் வினவினர்.

உடன் பயணம் செய்த ஆங்கிலேயர்கள் இருவரும் வியப் படைந்து, ''ஓ உமக்கு ஆங்கிலம் தெரிகிறதே! நாங்கள் உம்மைப் பற்றிக் கேலி பேசி வந்ததை நீர் ஏன் நிராகரிக்கவில்லை?'' என்று கேட்டார்கள்.

''அன்பர்களே! நான் மூர்க்கர்களைக் காண்பது இதுவல்ல முதல் தடவை!'' என்று சுவாமிகள் மறுமொழி விடுத்தார்.

அதைக் கேட்டதும் ஆங்கிலேயர்களுக்குக் கோபம் மூண்டு விட்டது. சுவாமிகளைத் தாக்க முன்வந்தார்கள். ''ஒகோ! ஒழுக்கம் தவறி நடந்து கொண்டதுமல்லாமல் தேகவலிமையால் உங்களது மேனமையைச் சாதிக்க வருகின்றீர்களா? நல்லது வாருங்கள்! அதற்கும் நான் ஆயத்தம்!'' என்று சொல்லியவாறே சட்டை விளிம்பைச் சுருட்டிக் கொண்டு சுவாமிகள் மற்போருக்குத் தயாரானர். சுவாமிகள் முகத்தில் திகழ்ந்த தைரியத்தையும் புஜங்களில் துடித்த வலிமையையும் கண்ணுற்ற ஆங்கிலேயர்கள் பயந்து பின்வாங்கிவிட்டார்கள்.

தாங்கள் தவருக நடந்து கொண்டதற்கு மனப்பூர்வமாக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள். அதன்பிறகு சுவாமிகள் அவ்விருவருடனும் அன்போடு உரையாடத் தொடங்கினர். அறிவுரைகள் பல அவர்களுக்குக் கூறினர்; 'சுத்த வீரனே அகிம்சா தர்மத்தையும் காருண்யத்தையும் கையாள வல்லவன்' என்று சுவாமிகள் அவர்களுக்குப் போதித்தார்.

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்

காரைக்குடி.

மூதறிஞர் முனைவர் வ. சுப. மாணிக்கனார் எழுதிய நூல்கள்!

அண்மையில் இயற்கை எய்திய மூதறிஞர் முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் 1. மனைவியின் உரிமை 2. நெல்லிக்கனி 3. உப்பங்கழி 4. ஒரு நொடியில் ஆகிய நாடக நூல்களையும்—

1 தொல்காப்பியக் கடல், 2. திருக்குறட் சுடர், 3. சங்கநெறி, 4. காப்பியப் பார்வை, 5. இலக்கியச் சாறு, 6 தமிழ்க் கதிர், 7. தமிழ்க் காதல், 8. வள்ளுவம், 9. கம்பர் ஆகிய ஆராய்ச்சி நூல்களையும்—

1. கொடை விளக்கு, 2. மாமலர்கள் என்ற இரு கவிதை நூல்களையும்—

1. இந்திய ஆட்சி மொழிகள், 2. இரட்டைக் காப்பியங்கள், 3. உரைநடைத் திருக்குறள், 4. நகரத்தார் அறப்பட்டயங்கள் ஆகிய பிறவகை நூல்களையும்—

1. The Tamil Concept of Love, 2. A Study of Tamil Verbs, 3. Collected Papers, 4. Tamilology என்ற பெயர்களில் ஆங்கில நூல்களையும் படைத்திருக்கிறார்கள்.

மனிதன் எந்நாளும் செயல் செய்யக்கூடியவன். அதனை வலியுறுத்துவது தான் திருக்குறள். அதற்காகவே குறள்களை மிக நுட்பமாக ஆய்வுசெய்து 'வள்ளுவம்' என்ற பெயரில் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் ஒரு அரிய நூலைப் படைத்திருக்கிறார்கள். இதைத் தமிழ் அறிஞர் உலகம் தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது. எனவே நகரத்தார்கள் இந்த அரிய நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும்.

வ. சுப. மாணிக்கனார் மறைவிற்கு இரங்கல் தீர்மானம்

தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும தமிழறிஞரும் கொடை விளககு, வள்ளுவம், தமிழ்க் காதல் கம்பர் முதலிய பல நூற்களின் மூலம் தமிழறிந்த சான்றோர் மனத்தில் தனி இடம் பெற்றவரும் தமிழ் எழுத்துச் சீர் திருத்தத்தைத் தடுத்து நிறுத்தியவரும் தமிழ் வழிக் கல்வி இயக்கத்தைத்தொடுத்து நின்றவரும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் பண்டித மணியின் தலை மாணாக்கரும், தமிழகப் புலவர் குழு, காரைக்குடித் தமிழ்ச் சங்கம், அழகப்பர் கல்லூரி, மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர்மன்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெருந் துணையாகத் திகழ்ந்தவருமாகிய தமிழ் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தமை பற்றிப் பெரிதும் வருந்துகிறோம்.

அவரைப் பிரிந்து வருந்தும் அவர் குடும்பத்தாருக்கு நம் இரங்கலைப் புலப்படுத்திக் கொள்கிறோம். அவர் ஆத்மா சாந்தி பெறவும் அவர் எடுத்த பணிகள் இனிது நிறைவேறவும் இறைவன் திருவடிகளை வணங்குகிறோம்.

(மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக நகர விடுதியில் 5-5-89 அன்று நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது.)

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் கல்வி உதவி!

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் தலைவர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் ஆண்டு தோறும் பிளஸ் டூ (Plus Two) தேர்வில் தமிழ்நாடு மாநில அள வில் அதிகபட்ச மதிப்பெண் (Highest Marks) பெற்ற நகரத் தார் மாணவர் ஒருவருக்கும், நகரத்தார் மாணவி ஒருவருக்கும் படிக்க முதலாவது ஆண்டு முதல் கல்லூரிக் கட்டணம் முழுமையும், விடுதியில் தங்கினால் விடுதிச் செலவும் இலவசமாக வழங்கு கிறார்கள்.

அதிகபட்ச மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர் மதிப்பெண் நகலுடனும், கல்லூரியில்/விடுதி யில் சேர்ந்துள்ள அத்தாட்சியுட னும், தங்களது சொந்த ஊர், தாய், தந்தை மற்றும் முகவரி யோடு எல்லாவற்றையும் இணைத்து நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை-600001 என்ற முக வரிக்கு அனுப்பி வைக்கலாம்.

திருமணம்

ஸ்ரீ சொக்கேசர் சிட் பண்டு பி. லிட் நிறுவனத்தின் பங்குதார ரும் மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான மேலைச்சிவபுரி அ. சுப. அண்ணா மலைச் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி வள்ளிமயில் B. Com. க்கும் வி. லெட்சுமிபுரம் ப அ மெ. மெய்யப்பசெட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அடைக்கலவன் என்ற சரவணன் B. A. க்கும் மேலைச்சிவபுரியில் 18-5-89 அன்று திருமணம் சிறப் பாக நடைபெற்றது. திருமணத் திற்குத் தொழிலதிபர்கள், வணி கர்கள், அறிஞர்கள், அலுவலர் கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கல்வித் துறையில் நாட்டின் முன்னேற்றம்

ஃ இந்தியாவில் மக்கள் தொகை 1951ல் 361.09 மில்லியன்; 1981ல் இது 685.18 மில்லியனாக அதிகரித்தது. 1987ல் மக்கள் தொகை மேலும் உயர்ந்து 76.7 கோடியாக ஆகியது.

ஃ நாடு விடுதலையடைந்தபோது 14சதவிகிதமாக இருந்த எழுத்தறிவு விகிதம் 1951ல் 16.67 சதவிகிதமாக அதிகரித்தது 1981-ல் அது 36.23 சதவிகிதமாக அதிகரித்தது.

ஃ எழுத்தறிவு விகிதத்தில் முதலிடம் வகிப்பது கேரளம் (70.41%) குறைந்த எழுத்தறிவு விகிதம் உள்ள மாநிலம் அருணாசலப்பிரதேசம் (20.79%) நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 1951ல் 60.19 மில்லியனிலிருந்து 1981ல் 247.55 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஃ முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 169 கோடியாக இருந்த கல்வித்திட்ட ஒதுக்கீடு ஏழாவது திட்டக் காலத்தில் ரூ 6,383 கோடியாக அதிகரித்துள்ளது.

ஃ கல்வித் துறைக்கான மத்திய திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவினத்துக்கென 1989-90ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ 852 கோடி.

ஃ 1951ல் நாட்டில் மொத்தம் 27 பல்கலைகள் மட்டுமே இயங்கி வந்தன. 1986-87ல் இவற்றின் எண்ணிக்கை 157ஆக உயர்ந்தது.

ஃ 1986ல் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சட்ட திருத்தத்தினையடுத்து கல்வி மத்திய மற்றும் மாநில அரசுகளின் கட்டுப்பொறுப்பில் வந்தது.

ஃ தேசிய கல்விக் கொள்கை மற்றும் செயல் திட்ட அமல் 1986ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு எந்தவித பாரபட்சமுமின்றி அனைத்து மாணவர்களும் தரமான கல்வி பெற உறுதி செய்யப்பட்டது.

ஃ 1950-51ல் 2,09, 671ஆக இருந்த துவக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1986-87ல் 5, 37, 399ஆகவும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 7, 288லிருந்து 64, 240 ஆகவும் கல்லூரிகளின் எண்ணிக்கை 542லிருந்து 4151ஆகவும் அதிகரித்துள்ளன.

ஃ கல்லூரி மாணவ—மாணவியர் எண்ணிக்கை 1950-51ல் 0.36 மில்லியனிலிருந்து 1986-87ல் 5 2 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஃ 1950-51ல் 782 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் 53 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இயங்கி வந்தன. 1986-87ல் இவற்றின் எண்ணிக்கை முறையே 973ஆகவும் 462 ஆகவும் அதிகரித்துள்ளது.

ஃ எழுத்தறிவின்மையை நாட்டிலிருந்தே ஒழித்துக்கட்டும் நோக்கத்துடன் 1987ல் தேசிய எழுத்தறிவு இயக்கம் துவக்கப்பட்டது. 1990க்குள் 15 முதல் 35 வயது வரையிலான வயது உடைய 80 மில்லியன் எழுத்தறிவற்றோருக்கு செயல்முறை எழுத்தறிவை ஊட்டவும் 1995ல் மீதமுள்ள 50 மில்லியன் பேருக்கு எழுத்தறிவு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் இந்த இலக்கு எட்டப்படும்.

ஃ நல்ல தரமான கல்வியை வழங்கும்நோக்கத்துடன் நாடெங்கிலும் உள்ள 29 மாநிலங்கள் நேரடி ஆட்சிப் பகுதிகளில் 256 நவோதயா பள்ளிகள் நிறுவப்பட்டன. ஊரகப்பகுதிகளில் வாழும் திறமைமிக்க சிறுவர் சிறுமியருக்கு பண்பாடு சுற்றுப்புறச் சூழல். உணர்வு ஆகியவற்றை ஊட்டும் நோக்கம் கொண்டவை இந்த நவோதயா பள்ளிகள்.

இராங்கியத்தில் வைகாசி விசாகத் திருவிழா

இராங்கியம் அருள்மிகு சுப்பிர மணிய சுவாமி திருக்கோயிலில் 20-5-89 அன்று வைகாசிவிசாகத் திருவிழா சிறப்பாக நடைபெற் றது.

அன்று காலை 11-00 மணிக்கு அபிஷேக ஆராதனைகளும் பகல் 12 மணி அளவில் மங்கலப் பொருட்கள் ஏலமும் மாலை 2-00 மணிக்கு அன்னதானமும் நடை பெற்றன.

இரவு 7-30 மணி அளவில் புதுக்கோட்டை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. இரத்தின சபாபதி அவர்கள் தலை மையில் திருமதி டாக்டர் விஜய லெட்சுமி நவநீதகிருஷ்ணன் குழுவினரின் நாட்டுப்புறப் பாடல் ஆடல் அரங்கம் சிறப்பாக நடை பெற்றது. 21-5-89 அன்று அதி காலை சுவாமி புறப்பாடு நடை பெற்றது.

மயிலாடுதுறை சங்கத்திற்கு நிர்வாகிகள் தேர்வு

மயிலாடுதுறை நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தின் பேரவைக் கூட்டம் 16-4-89 அன்று நடைபெற்றது.

அப்போது நடப்பு ஆண்டுக்கு திரு. பிஎல். சொக்கலிங்கம் செட் டியார் தலைவராகவும் திரு. இராம சிதம்பரம் திரு. ஆர் எம். இராம நாதன் இருவரும் உதவித் தலை வர்களாகவும் திரு பிஎல். பழநி யப்பன் செயலாளராகவும் திரு. என். சுப்பையா திரு. பி. ஆர். இராமசாமி, இருவரும் உதவிச் செயலாளர்களாகவும் திரு. ஆர் எம். வைரவன் பொருளாளராக வும் மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் 10 பேர் விசேட அமைப்பாளர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர். கூட் டத்தில் பல தீர்மானங்கள் நிறை வேற்றப் பெற்றன.

ஒளி சிந்தும் மாணிக்கம்



கடல்போல ஆழ்ந்தகன்ற கல்வியாளர்!
கதிர்மணிக்குப் புகழ்மிகுந்த தலைமாணாக்கர்!
கொடை அண்ணாமலை வள்ளல் அழகப்பர் பல்
கலைக்கழகம் மொழிவளர்த்த தமிழ்ப்பேராசான்!
படிப்படியாய் முன்னேறித் துணைவேந்தானார்!
பைந்தமிழர் உலகத்தின் தனிவேந்தானார்!
மடிந்தாராம் மாணிக்கம்! ஐயோ! இல்லை!
மூதறிஞர் பயன்றமிழாய் வாழ்கின்றாரே!

உள்ளம்போல் வெள்ளையுடை உடம்பிருக்கும்!
ஒப்பில்லாச் சுறுசுறுப்போ உடனிருக்கும்!
பிள்ளைபோல் குறுஞ்சிரிப்பு இதழிருக்கும்!
பெயர்த்துவைக்கும் அடியெலாம் தமிழிருக்கும்!
வெள்ளம்போல் கருத்துமழை நாவிருக்கும்
வேந்தரையும் நெறிப்படுத்தும் துணிவிருக்கும்!
வள்ளலெங்கள் மாணிக்கம் மாண்டாராமே!
மாமனிதர் பண்புகளால் ஒளிர்கின்றாரே!

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் இரங்கற் கூட்டம்

முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் மறைவிற்கு மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைக் கட்டிடத்தில் 30-4-89 மாலை இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இரங்கல் கூட்டத்திற்கு முனைவர் தமிழண்ணல் அவர்கள் தலைமை யேற்றார்கள். முனைவர் சுப. அண்ணாமலை அவர்களும், முனைவர் வெ. சு. அழகப்பன அவர்களும், முனைவர் பழ. முத்துவீரப்பன் அவர்களும், பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்களும்

தணியாத ''தமிழ்க்காதல்'' கொண்டிருந்தார்!
தன்னிகரில் வள்ளுவத்தைப் படைத்து நின்றார்!
அணிசிறந்த கம்பனையும் அளந்தார்! வென்றார்!
அன்னைக்குத் துறைதோறும் புதுமை கண்டார்!
பணியாது தமிழ்க்கென்று துடித்தார்! யார்க்கும்
பணியாது மொழிவளர்த்தார்! பயன்நூல் தந்தார்!
இணையில்லா மாணிக்கம் இறந்தாராமே!
எழுத்தாளர் சிந்தனையால் இருக்கின்றாரே!

தமிழகத்தின் புலவர்குழுத் தலைவர் என்பார்!
தமிழ்ச்சங்க அமைப்பிற்கும் தலைவர் என்பார்!
தமிழ்பரப்பும் 'ஆசிரியர் மன்றம்' போற்றும்
தனித்தலைவர் பணித்தலைவர் இவரே என்பார்!
தமிழ்வளர்க்கும் குழுவிலெல்லாம் தலைமை பெற்றார்!
சான்றாண்மைத் தகுதியினால் மதிப்புப் பெற்றார்!
தமிழ்ப்பெரியோர் மாணிக்கம் வீழ்ந்தாராமே!
தமிழ்ச்செம்மல் தொண்டுகளால் தழைக்கின்றாரே!

வளர்மேலைச் சிவபுரிக்குப் பெருமை தந்தார்!
வாழ்காரைக்குடி நகர்க்குச் சிறப்புத் தந்தார்!
வளர்புதுவை நகரத்தில் பணிமுடித்தார்!
வாழ்வசங்கு வாழ்ந்து தமிழ்வரலாறானார்!
இளங்கதிர்போல் வ. சுப. மா. இயங்கி வந்தார்
ஈட்டுபுகழ்ப் பெருமைநலம் குலத்திற் கீந்தார்!
ஒளிசிந்தும் மாணிக்கம் ஓய்ந்தாராமே!
ஓவியத்தார் புகழுடம்பிற் பொலிகின்றாரே!

— முனைவர் பழ. முத்துவீரப்பன்

(செம்மல், முனைவர் வ. சுப. மாணிக்கனாரின் மறைவை ஒட்டி மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் 30-4-89 அன்று முனைவர் தமிழண்ணல் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த அஞ்சலிக் கூட்டத்தில் படித்த இரங்கற் பா.)

பங்கேற்று முனைவர் செம்மல் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் பெருந் தொண்டினை நினைவு கூர்ந்தார்கள்.

இரங்கல் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. பின்னர் அவரின் ஆத்மா சாந்தியடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பூச்சொரிதல் விழா

சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோயில் பூச்சொரிதல் விழா 28-5-89 அன்று நடைபெற்றது. அதில் குருவிக் கொண்டான்பட்டி திரு. ராம. அ. கரு. இராஜேந்திரன் ஆர்வமுடன் தொண்டாற்றினர்.

வ. சுப. மாணிக்கனர் ஒரு பெரிய மலை

என் ஆசிரியர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள், ஆசிரியராக மட்டுமின்றிப் பெற்றோர் நிலையிலிருந்து காரைக்குடி வள்ளல் உயர்திரு. ராம வீர. இராமசாமி செட்டியார் அவர்களிடம் ஆற்றுப்படுத்தி நான் எம். ஏ. படிப்பதற்கு பொருளுதவி செய்தார்கள்.

மாவன்ன அவர்களின் மக்களில் சிலர் என் மாணவர்கள்.

மாவன்ன தமிழறிஞர். உலகில் ஒரு பெரியமலை. அவர்களை அரசியல் உலகில் ராஜாஜிபோல 'இலக்கிய உலக இராஜாஜி' என்று சொல்லலாம். மாவன்ன அவர்கள் நகரத்தார் மரபுப்படி 'வ. சுப.' என்ற விலாசம் உள்ளவர்கள்.

மாவன்ன மிகவும் இறுக்கமானவர்கள். யாரும் எளிதில் நெருங்க முடியாது. ஆனால் கதிர் வீசல் முறையில் அவர்களது அறிவும் முத்திரையும் மாணவர்கட்குப் பரவும். மாவன்ன 'கடமை-யே கடவுள்' என்று கருதுபவர்கள்.

மாவன்ன நினைவைப் போற்றும் வகையில் அறிஞர்கள் எடுக்கும் முயற்சியில் 'அணில்' போல எளியேன் பணியைச் செய்யக் காத்திருக்கிறேன்.

— அர. சிங்காரவடிவேலன்

(வ. சுப. மாணிக்கனர் அவர்கள் மறைவையொட்டி மதுரை நகர விடுதியில் 5-5-89 அன்று நிகழ்ந்த அஞ்சலிக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்)

வ. சுப. மாணிக்கனார் மறைவுக்கு இரங்கற் கூட்டம்

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் தமிழ் மூதறிஞருமான முனைவர் வ. சுப. மாணிக்கனரின் மறைவை ஒட்டி மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக நகர விடுதியில் 5-5-89 மாலை சங்கத் தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் வ. சுப. மாணிக்கனாரின் குண நலன்களையும் சிறப்பியல்புகளையும் தமிழுலகத்திற்குச் செய்த அரிய பல தொண்டுகளையும் பற்றிக் கவிஞர் முனைவர் அர. சிங்காரவடிவேலன், திரு. சொ சொ மீ சுந்தரம் திரு. இராம. விசுவநாதன். முனைவர் தமிழண்ணல் இந்திய அரசு செய்தித்துறை அதிகாரி கவிஞர் சொக்கு சுப்பிரமணியம், டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் பேராசிரியர் திரு ஆர். எம். சோமன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினார்கள்.

பின்னர் வ. சுப. மாணிக்கனாரின் மறைவு குறித்து முனைவர் தமிழண்ணல் அவர்களால் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பெற்று இரண்டு மணித் துளிகள் எல்லோரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தியபின் கூட்டம் நிறைவெய்தியது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001 விருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்